முழுநாவல்

# கனக்ச்சிதமாய்...

ராஜா அண்ணாமலைபுரம். 6500 சதுர அடியில் அந்த ஆடம்பர பங்களா அமைந்திருந்தது. வெளிவாசலில் ராட்சச இரும்புக்கேட். காவல் கூண்டில் மிடுக்கான செக்யூரிட்டி இயந்திரத் துப்பாக்கியுடன். காவல் கூண்டில் ஒரு க்ளோஸ்சர்க்யூட் கேமிரா மெதுமெதுவாக அரை வட்டமாய் சுழன்றது. தோட்டத்தில் ஒன்று பங்களாவுக்குள் நான்கு க்ளோஸ்சர்க்யூட் கேமிராக்கள். பங்களாவின் பாதுகாப்புக்கு மூன்று ஷிப்ட்களில் முப்பது செக்யூரிட்டிகள். செக்யூரிட்டிகளின் உதவிக்கு ஆறு டாபர்மேன் நாய்கள். இரவாடையில் படுத்திருந்தான் பிரசன்னா. பிரசன்னாவுக்கு வயது 34. சென்னையின் முதல் பத்து பணக்காரர்களில் மூன்றாவது இடம் பிரசன்னாவுக்கு. பிரசன்னா இருபதுக்கும் மேற்பட்ட தொழில்களை செய்யும் இளம் தொழிலதிபன். பிரசன்னாவின் ப்ரூவரிஸ் தயாரிக்கும் SUDDEN KICK பியர் தமிழரின் சுகதுக்க விருப்ப போதை பானம். பிரசன்னா 175 செ.மீ. உயரம். உற்பத்திப் பொறியியலும் முதுகலை நிர்வாகவியலும் படித்தவன். நடிகர் சரத்பாபு சாயல்.

பிரசன்னாவின் அருகில் அவனது காதல் மனைவி சந்தியா படுத்திருந்தாள்.

சந்தியா. வயது முப்பது. இளங்கலை தோட்டக்கலை பயின்றவள். நடிகை சிம்ரன் சாயல்.

பிரசன்னா-சந்தியா தம்பதியரின் ஒரே மகன் அருண். அருணுக்கு வயது ஒன்பது. செயிண்ட் மேரிஸ் கான்வெண்ட்டில் நான்காம் வகுப்பு படிக்கிறவன். அருணுக்கு ஸ்கேட்டிங் ஸ்விம்மிங் பொழுதுபோக்குகள்.

அருணுக்கு அன்று எட்டு வயது முடிந்து ஒன்பதாவது வயது ஆரம்பம். அருண் தனி படுக்கையறையில் படுத்திருந்தான். பிரசன்னாவும் சந்தியாவும் ஆளுக்கொரு ரோஜாப்பூ பொக்கே எடுத்துக்கொண்டு பூனைபாதம் வைத்து அருண் படுக்கையறைக்குள் பிரவேசித்தனர். அருணின் வலது கன்னத்தில் சந்தியாவும் இடது கன்னத்தில் பிரசன்னாவும் முத்தமிட்டனர். முத்தத்தின் ஈரம் அருணை தூக்கம் கலையச்செய்தது. முத்தம் தந்த பெற்றோரின் கழுத்தை வளைத்து தனது முகத்தில் இறுத்திக் கொண்டான்.

''குட்மார்னிங் டாடி! குட்மார்னிங் மம்மி!''

''மெனி மோர்

-ஆர்னிகா நாசர்



◆ அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு திரைப்படங்களில் நடித்து வரும், ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா சென் போன்றவர்களைப் போல மிஸ் இந்தியாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரியன்கா சோப்ராவும் இந்திய திரைப்பட உலகில் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளார்.

—சுரவீந்திரன்



ஹாப்பி ரிட்டன்ஸ் ஆஃப் தி டே!'' அருண் சடக்கென்று எழுந்து அமர்ந்தான். இடது கையால் அம்மாவின் பொக்கேயையும் வலது கையால் அப்பாவின் பொக்கேயையும் வாங்கிக் கொண்டான்.

முழங்காலிட்டு உயர்ந்து பெற்றோரின் கன்னங்களில் திகட்டதிகட்ட முத்தமிட்டான். கன்னத்தில் படர்ந்திருந்த ஈரத்தை கணவன் மனைவி தங்கள் முகம் முழுக்க தேய்த்துக் கொண்டனர்.

''எனது பிறந்தநாளைக்கு என்ன பரிசு தரப்போகிறீர்கள்?''

''சஸ்பென்ஸ். குளித்துவிட்டு ஐயப்பன் கோயிலுக்கு போய்விட்டு வருவம். அப்போது நீயே தெரிந்து கொள்வாய்!''

''என்ன பரிசாக இருந்தாலும் எனக்கு ஏமாற்றமே!''

''ஏம்ப்பா?''

''பின்ன என்ன? எனக்கு வயது ஒன்பது ஆரம்பிச்சிருக்கு. எனக்கு ஒரு தம்பி பாப்பாவோ ஒரு தங்கச்சி பாப்பாவோ பெத்துத்தந்திருந்தீங்கன்னா சிறப்பான பிறந்தநாள் பரிசாக கருதியிருப்பேன். இப்பயும் ஒண்ணும் கெட்டுப் போகல. நாளைலயிருந்து முயற்சி பண்ணீங்கன்னா என்னோட அடுத்த பிறந்தநாளைக்காவது நான் விரும்பின பிறந்தநாள் பரிசு கிடைச்சிடும்!''

''பையன் கேக்கிறான். முயற்சி பண்ணலாமா சந்தியா?''

சங்கோஜமாய் சிரித்தாள் சந்தியா. ''என்ன அருண் இப்படியெல்லாம் பேசிக்கிட்டு. இப்படியெல்லாம் பேச யார் உனக்கு சொல்லிக் குடுக்கிறாங்க?''

''தனிமையில வாடுறேன் மம்மி!''

''சரி, சரி, எழுந்திரு குளிக்கலாம்!'' அருணை குளியலறைக்கு கூட்டிச்சென்றாள் சந்தியா. தாயின் முன் ஆடைகளை அகற்ற கூச்சப்பட்டான் அருண்.

''நீ போ மம்மி... நானே குளிச்சிக்கிறேன!''

''அட... பெரிய மனுசா!''

குளித்து வந்த அருணுக்கு பட்டு வேட்டி பட்டு சட்டை அணிவித்தாள் சந்தியா. பிரசன்னாவுக்கு பட்டு வேட்டி பட்டு சட்டை. சந்தியா பட்டுப்புடவையில்.

ஐயப்பன் கோயிலில் அருணின் சிம்மராசி பூரநட்சத்திரத்துக்கு விசேஷ அர்ச்சனை நடந்தது. வாசலில் பிரசன்னாவின் பணியாளர்கள் ஆயிரம் ஐந்து ரூபாய் நாணங்களை பிச்சைக்காரர்களுக்கு வழங்கினர்.

அத்துடன் பங்களா பணியாளர் அனைவருக்கும் பலாப்பழ பாயாசம் விநியோகிக்கப்பட்டது. இருபதுக்கும் மேற்பட்ட காலை சிற்றுண்டி அயிட்டங்கள். சுவை பார்த்து சிறிது சிறிது உண்டான். பட்டுவேட்டி பட்டு சட்டையிலிருந்து பள்ளி சீருடைக்கு மாறினான் அருண்.

பள்ளி சகாக்களுக்கு வழங்க சாக்லேட் டின் எடுத்துக் கொண்டான்.

''இன்று ஈவினிங் ப்ரோக்ராம் என்ன மம்மி?''

''சென்னையின் நான்கு அனாதை ஆசிரமங்களின் இன்றைய மூன்று வேளை உணவுகளை ஸ்பான்ஸர் பண்ணியிருக்கிறோம் அருண். மாலை 4 மணியிலிருந்து இரவு 10 மணி வரை நீ விரும்பிய இடங்களுக்க போகலாம்!''

சந்தியா ஒரு வைரமோதிரத்தை எடுத்து மகனின் இடது மோதிர விரலில் பூட்டினாள்.

''தாங்க்யூ மம்மி!''

''உன் தந்தையை விட நீ வாழ்க்கையில் கொடிகட்டி பறக்க வாழ்த்துகிறேன் அருண்!''

பிரசான்னாவின் கண்களில் பொறாமை மிளிர்ந்தது. ''உன்னைத்தவிர யாரும் இப்படி மகனை வாழ்த்தமாட்டார்கள் சந்தியா!''

''இதிலென்ன தப்பு? உங்க தந்தையை விட நீங்கள் வளர்ந்திருக்கிறீர்கள். உங்களை விட உங்கள் மகன் வளர வேண்டும். அருணை விட அருணின் மகன் வளர வேண்டும். அதுதானே குடும்ப பாரம்பரியத்துக்கு உகந்தது?''

''சரிம்மா. உன்கிட்ட எதுக்கு ஆர்க்யூமென்ட்? உன் வாழ்த்து நிஜமாகட்

டும். ஆனால் ஒன்று பிசினஸ் என்று வந்துவிட்டால் சொந்தபந்தம் பார்க்கமாட்டேன். யாரின் கொடியும் எனது கொடியை தாழ்த்த அனுமதிக்கமாட்டேன்!''

''அருண் உங்களுடன் பிசினஸில் போட்டியிட இன்னும் குறைந்தபட்சம். பதினைஞ்சு வருஷம் ஆகும். இன்னைக்கே இப்பவே அவன் போட்டிக்கு வந்திட்ட மாதிரி சவால் விடுறீங்களே...''

சிரித்தான் பிரசன்னா. ''அதானே... பதினைஞ்சு வருஷம் அட்வான்ஸா உணர்ச்சி வசப்படுறேனே...''

அருண் பெற்றோரை தட்டிக் கொடுத்தான். ''இருவரும் சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள். அப்பாவின் கப்பலில் ஒரு கொடி பறக்கும். எனது கப்பலில் ஒரு கொடி பறக்கும் எனது கொடி அப்பாவின் கொடிக்கு மட்டுமல்ல யாரின் கொடிக்கும் போட்டியல்ல. பிகாஸ்... எனது வழி தனி வழி!''

''எப்பா பெரிய மனுஷனா! நீ பள்ளிக்கு கிளம்பு!''

சீருடையில் வந்த ஓட்டுநன் வணக்கம் செய்தான். ''குட்மார்னிங்!''

ஷு மாட்டிக்கொண்டு கிளம்பினான் அருண். டாடா குவாலிஸ் லக்ஜுரி காரில் ஏறிக்கொண்டான். உடன் ஒரு செக்யூரிட்டி பிஸ்டலுடன்.

பெற்றோருக்கு டாட்டா காண்பித்தான். செக்யூரிட்டி ரிமோட் உபயோகித்து வெளிஇரும்பு கேட்டைத் திறந்து விட்டான்.

எதிர் சாலையில் காத்திருந்த கார் உயிர்த்தது. அதிலிருந்தவன் உலா தொலைபேசியில். யாருடனோ தொடர்பு கொண்டான். ''பறவை பள்ளிக்குப் பறந்து போகிறது!''

DHL கூரியர்ஸ் டெலிவரிபாய் மொபெட்டில் வந்து நின்று இரும்பு கேட் வழியே எட்டினான். ''செக்யூரிட்டி!''

''என்ன?''

''அருண் பிரசன்னாவுக்கு கூரியர் பார்சல் ஒன்று சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கிறது!''

செக்யூரிட்டி அதனை வாங்கி பாம் டிடக்டர் வைத்து ஆராய்ந்து திருப்தியானான். கையெழுத்திட்டு பார்சலை வாங்கிக் கொண்டான்.

கைமாறி கைமாறி பார்சல் பிரசன்னா பார்வைக்கு வந்தது.

அனுப்புநர் முகவரியில் 'இளமாறன்' என போடப்பட்டிருந்தது.

'இளமாறன் யார்?''

உதவியாளன் பார்சலை கவனமாய் பிரிக்க ஆரம்பித்தான்.

பிரசன்னாவும் சந்தியாவும் ஆவலுடன் குனிந்திருந்தனர்.

பார்சலுக்குள் அருணின் சாயலில் ஒரு பொம்மை படுத்திருந்தது. பொம்மையின் கழுத்தை ஒரு சுருக்கு வட்டமிட்டிருந்தது. நெஞ்சில் ஒரு கத்தி குத்தப்பட்டிருந்தது. சிவப்புநிற இரத்தம் நெஞ்சுப்பகுதி சட்டையில் உறைந்திருந்தது. பொம்மையின் காலில் ஒரு அட்டை. அட்டையில் தனித்தனி எழுத்துக்கள் ஒட்டிய வாசகங்கள்.

'அருணுக்கு எங்களது நெஞ்சார்ந்த இறந்த நாள் வாழ்த்துக்கள்!''



## 2

காவல்துறை வாகனங்கள் வரிசையாக போர்டிகோவை ஒட்டி சறுக்கி நின்றன.

முதல் வாகனத்திலிருந்து குதித்து இறங்கினார் தேவா.

இரண்டாம் வாகனத்திலிருந்து பவ்யமாக இறங்கினான் டியாரா ராஜ்குமார். வெளிர் பச்சை நிற ஃபுல் சூட்டில் இருந்தான்.

போர்டிகோவின் அருகே அமைந்திருந்த படிக்கட்டில் நின்று அனைவருக்கும் கைகூப்பினான் பிரசன்னா.

தேவாவும் டியாராவும் பிரசன்னாவுடன் நடந்தனர். ''உங்களுக்கு வந்த பார்சல் எங்க இருக்கு?''

அழுது வீங்கிய முகத்துடன் ஒரு படுக்கையறையிலிருந்து வெளிப்பட்டாள் சந்தியா.

மேஜை மீதிருந்த பிரிக்கப்பட்ட பார்சலை கட்டினாள் சந்தியா.

தடயவியல் நிபுணரும் டியாராவும் தேவாவும் டிஸ்போஸபிள் க்ளவுஸ் அணிந்து கொண்டனர்.

தடயவியல் நிபுணர் பொம்மையை கையில் எடுத்து ஆராய்ந்தார். கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டிருந்த நரம்பை தடவிப்பார்த்தார். நெஞ்சில் குத்தப்பட்டிருந்த பைபர் பிளாஸ்டிக் கத்தியை தனியே எடுத்துப் பார்த்தார். பொம்மையின் நெஞ்சில் தடவியிருந்த சிவப்பு திரவத்தை சோதித்தார். பொம்மை பார்சல் செய்யப்பட்ட விதத்தை உன்னித்தார். பொம்மையின் காலில் ஒட்டப்பட்டிருந்த அட்டை வாசகங்களை அக்கு வேறு ஆணிவேறாய் அலசினார்.

ரேகை தடயங்கள் துழவினார்.

டியாரா பிரசன்னாவிடம், ''பார்சலை யார் வாங்கியது?''

''கேட் செக்யூரிட்டி!''

''உங்களின் பங்களாவில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களின் முழு ஜாதகம் வேண்டுமே?

செக்யூரிட்டி ஆபிஸர் ஒரு பிளாப்பி நீட்டினார். ''இதில் பங்களாவில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களின் புகைப்படங்களும் பயோடேட்டாக்களும் அவர்களது ஸ்பெஸிமன் கைரேகைகளும் தொடுக்கப்பட்டுள்ளன!''

வாங்கிக்கொண்டான் டியாரா.

''இன்று உங்களின் மகனுக்கு ஒன்பதாவது பிறந்தநாள் இல்லையா?''

''ஆமாம்!''

''சிங்கப்பூரில் உங்களுக்கு சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா?''

''இருக்கிறார்கள்!''

''சிங்கப்பூரில் உங்களுக்கு தொழில் நண்பர்கள் இருக்கிறார்களா?''

''தொழில் நண்பர்களும் இருக்கிறார்கள்; தொழில் எதிரிகளும்

இருக்கிறார்கள் டியாரா!''

''எந்த வகை தொழில் எதிரிகள்?''

''கொரியாவிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டியின் உதிரிபாகங்களை சிங்கப்பூர் வழியாக இறக்குமதி செய்து இந்தியாவில் அசெம்பிள் செய்து ஒரு குறிப்பிட்ட பிராண்ட் டிவியாக மார்க்கெட்டிங் செய்கிறோம். அந்த டீலிங்கில் சில சிங்கப்பூர் ஆசாமிகள் எனக்கு பரம எதிரி, ஆனார்கள்!''

''அந்த எதிரிகளில் இளமாறனும் உண்டா?''

''இளமாறன் என்ற பெயரை நான் கேள்விப்பட்டதில்லை!''

''மே பி எ பிக்ஷியஸ் நேம்!''

ஆமோதித்தான்.

''சென்னையிலுள்ள உங்கள் தொழில் எதிரிகளைப் பட்டியலிட முடியுமா?''

சிரித்தான் பிரசன்னா.

''பட்டியலிட்டால் ஒரு டெலிபோன் டைரக்டரி அளவு புத்தகம் கிடைக்கும்!''

''எதனால் இப்படி?''

''வெற்றி பணத்தையும் புகழையும் மட்டும் தராது. கூடவே எதிரிகளையும் தரும். மாஸ் ஸைக்காலஜி பற்றி நான் ஒரு தியரி தருகிறேன் டியாரா!''

''சொல்லுங்க!''

''ஒரு புதுமுகம் வெற்றி பெற்றால் அந்த புதுமுகம் தொடர்ந்து வெற்றிபெற மக்கள் விரும்புவர். ஒரு கட்டத்தில் புதுமுகம் பழைய முகம் ஆகிவிடும். இப்போது பழைய முகம் தோற்க வேண்டுமென அதே மக்கள் கடவுளை வேண்டுவர். ஒரு தொழிலதிபன் தொடர்ந்து வெற்றி பெற்றால் அவனால் தோல்வியுற்றோர் கூடி தனியாக ஒரு சிண்டிகேட் அமைத்துக் கொண்டு ஜெயிக்கும் தொழிலதிபனை வீழ்த்தப் பார்ப்பர். நான் யாரையும் வன்முறையால் ஜெயிப்பதை விட அதிகம் புத்தியால் ஜெயித்திருக்கிறேன். புத்திசாலித்தனமே என் ஆயுதம்!''

''இந்த பார்சல் உங்களை வெகுவாய் மிரட்டிவிட்டதோ?''

''இல்லை!''

''பின்னே ஏன் பெரிய அளவில் காவல்துறைக்கு புகார் செய்தீர்கள்?''

''குருதிப்புனல் பார்த்திருப்பீங்க. அதுல கமலஹாசன் சொல்லுவார்– தைரியம்ன்றது பயத்தை வெளில காட்டாம இருக்கிறதுதான்னு. நான் எனது மிரட்சியை கண்காட்சி செய்வதில்லை. காவல்துறைக்கு புகார் செய்யச் சொன்னது எனது மனைவி!''

''இந்த பார்சலை சீரியஸ் மிரட்டலா கருதுறீங்களோ?''

''இல்லை–ஆமாம்–இதுதான் என் பதில்!''

சிரித்தான் டியாரா. ''நீங்க பேசும் விதம் படு சாதுரியமா இருக்கு பிரசன்னா.''

கவலைபடிவுடன் சிரித்தான் பிரசன்னா.

''இந்த பார்சலை அடிஸனல் பொரன்ஸிக் ஆய்வுகளுக்கு எடுத்துச் செல்கிறோம். இனி உங்களுக்கு எந்த பார்சல் வந்தாலும் நீங்கள் எங்கள் ஒப்புதல் இல்லாமல் வாங்காதீர்கள். உங்களை உங்களது குடும்பத்தைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையத்தை காவல்துறை அமைக்கும்.''

''நன்றி டியாரா!''

''இந்த பார்சல் வந்ததை நீங்களோ உங்களது மனைவியோ உங்களது மகனிடம் தெரிவிக்க வேண்டாம்!''

சந்தியாவிடம் நடந்தான் டியாரா. ''மனக்கிலேசப்படாதிங்க. என்டயர் போலீஸ் டிபார்ட்மென்ட் இஸ் வித் யூ!''

உலா தொலைபேசி மூலமாக ஸிஜாவை தொடர்பு கொண்டு பார்சல் பற்றிக் கூறினான்.

''டி ஹெச் எல் கூரியர்ஸ் போய் அவங்க வாடிக்கையாளரிடம் பார்சலோ கடிதமோ வெறும் கடிதமோ டெலிவரி செய்யும் விதம் விசாரி. சிங்கப்பூரின் எந்த டி ஹெச் எல் கிளை இந்த பார்சலை பெற்றது? பார்சலைக் கொடுத்துச் சென்றவனின் அங்க அடையாளங்கள் என்ன? இளமாறன் என்ற பெயரில் கொடுத்த முகவரி உண்மையில் சிங்கப்பூரில் இருக்கிறதா? – முகவரி உண்மை என்றால் அந்த முகவரியில் வசிப்போர் யார்? என்கிற தகவல்களைச் சேகரி!''

''யெஸ் பாஸ்!''

உலாதொலைபேசியை மௌனமாக்கினான் டியாரா. ''நாங்கள் கிளம்புகிறோம் மிஸ்டர் பிரசன்னா!''

போர்டிகோவுக்கு நடந்தான் டியாரா. தனக்குரிய வாகனத்தில் ஏறிக்கொண்டான். வாகனம் புறப்பட்டது. காவல்துறை குழுமம் கிளம்பிப்போனவுடன் பிரசன்னா தொலைபேசியில் யாருடனோ தொடர்பு கொண்டான்.

''நான் பிரசன்னா!''

''சொல்லுங்க சார். நான் லீ பேசுகிறேன்!''

''எனது மகனை மிரட்டி சிங்கப்பூரிலிருந்து ஒரு பார்சல் டி.ஹெச்.எல். மூலமா வந்திருக்கு. அனுப்பினவன் பெயர் இளமாறன்னு போட்டுருக்கு!''

''லார்ட் புத்தா!''

''நீ கொஞ்சம் மோப்பம் பிடிச்சு பார்சல் அனுப்பின பார்ட்டி யாருன்னு கண்டுபிடிச்சு ரகசியமா நசுக்கிரு!''

''அப்படியே செஞ்சிடுறேன் சார்!''

ஒலிவாங்கியை வைத்தான் பிரசன்னா. கணவன் பேசி முடித்தவுடன் ஓடி வந்தாள் சந்தியா. ''கண்டுபிடிச்சு நசுக்கிறதுதான் தீர்வா? வன்முறைல நம்பிக்கை இல்லைன்னு வாய்க்கு வாய் பேசுற நீங்க இத செய்யலாமா?''

சட்டென்று அழுதான் பிரசன்னா.

''என்ன பண்ணச் சொல்ற? எனக்கு இருக்கறது ஒரே ஒரு மகன். என் குலம் தழைக்க அவனைத்தான் பெரிசா நம்பியிருக்கேன். அவனுக்கு ஏதாவதுன்னா நான் தாங்க மாட்டேன். சாது மிரண்டா காடு கொள்ளாது அல்லவா சந்தியா? பார்சலை பார்த்தக் கணம் என் உயிரிநிலையில் விதுக்னு ஏதுவோ குத்துச்சு சந்தியா. நாம சம்பாதிக்றது வாழறது எல்லாம் யாருக்காக... அவனுக்காகத்தானே? என்னை விட உயரமா அவன் கொடி

பிடிக்க அவன் உயிரோட இருந்தாகனுமே செல்லம்?''

''என்னது இது? குழந்தை மாதிரி பிஹேவ் பண்றீங்க? பார்சல் ஒரு சாதாரண விஷயம்! நீங்க அலுவலகத்துக்கு கிளம்புங்க!''

வாஷ்பேஸினுக்கு நடந்து முகத்தை அலம்பி பூத்துவாலையால் ஒற்றிக்கொண்டான். காருக்கு நடந்தான். டிரைவர் ஓடிவந்து பின் கதவைத் திறந்து விட்டான். பிரசன்னா அமர்ந்து கொள்ள கார் சீறிப்பாய்ந்தது.

**ப**ள்ளி வளாகம் பரபரத்தது.

மாணவர்கள் அந்த மரத்தடியைச் சூழ்ந்திருந்தனர்.

தலைமையாசிரியை கூட்டத்தைப் பிரித்தபடி உட்புகுந்தாள். ''என்ன வேடிக்கை?''

''மரத்தடில இருந்த கிருஷ்ணன் சிலையை யாரோ அகற்றிவிட்டு ஒரு மெழுகுச்சிலை வச்சிருக்காங்க மேடம்!''

அந்த மெழுகுச்சிலையை உற்று நோக்கிய தலைமையாசிரியை திடுக்கிட்டாள்.

''இது யார் சாயல்லயோ இருக்கே? யார் சாயல்?''

ஒரு பையன் கத்தினான்.

''மெழுகுச்சிலை அருண் மாதிரியேதான் இருக்கு மேடம்!''

''அட. ஆமாம்... இதென்ன வம்பு? சாமி சிலையை அகற்றிவிட்டு அருணோட மெழுகுச்சிலை? யாருடைய வேலையா இருக்கும்?''

மற்ற ஆசிரியைகள் ஓடிவந்தனர்.

''இதனை நாம காவல்துறைக்கு உடனடியா புகார் செய்வது நல்லது!''

◆ ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் ஆக்கிரமிப்பிற்கு முன்பு காபூலில் மட்டும் 15 அழகு படுத்தும் நிலையங்களிருந்தன. போர்களில் அழிந்துவிட்ட அவைகளுக்குப் பதிலாக அமெரிக்க உதவியோடு பல புதிய 'அழகு நிலையங்கள்' தோன்றி வருகின்றன.

–கரவீந்திரன்





''ஸ்டூடன்ட்ஸ்! மெழுகுச்சிலையை யாரும் தொடாதீங்க. அனைவரும் அவங்கவங்க கிளாஸ்ரூமுக்கு போங்க!''

கூட்டம் கலைய... அலுவலகத்திற்கு தலைமையாசிரியை மற்ற ஆசிரியைகளுடன் நடக்க–

ஸைலன்ஸர் பொருத்தப்பட்ட டெலஸ்கோபிக் துப்பாக்கி நிமிர்ந்தது. அதன் வட்டத்தின் மையப்புள்ளியில் அருணின் மெழுகுச்சிலையின் தலை!

ட்ரிக்கரை விரல் சுண்டியது. டுஷப்!

மெழுகுச்சிலையின் தலை வெடித்துச்சிதறியது!

மெழுகு பிசிறுகள் சகல திசைகளிலும் சிதற கூடுதல் பயத்துடன் மாணவர்கள் வகுப்பறைகளுக்குப் பறந்தனர்.

துப்பாக்கியின் பாகங்களைக் கழற்றி ஒரு கிட்பேக்குள் இட்டுக்கொண்டான் அவன். தரையில் கிடந்த தொப்பி எடுத்து தலையில் மாட்டிக்கொண்டான்.

வேகவேகமாய் நடந்து நடைமேடை மக்களுடன் கலந்தான்.

அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருக்கும் பள்ளிவளாகத்துக்குள் காவல்துறை வாகனம் பதட்டமாய் புகுந்தது!

## 3

**கா**வல்துறை வாகனம் பிரேக்கிட்டு நின்றது. அதிலிருந்து ஒரு உயர் காவல்துறை அதிகாரியும் ஆறு துணை காவல்துறை அதிகாரிகளும் வந்திறங்கினர்.

தலைமையாசிரியை ஓடிவந்தாள். உயர் காவல்துறை அதிகாரியைப் பார்த்து, ''வணக்கம் சார்!'' என்றாள்.

''வணக்கம். எங்கே அந்த சுடப்பட்ட மெழுகுச்சிலை?''

தலைமையாசிரியை கூட்டிச் சென்றாள்.

மெழுகுச்சிலை பள்ளிச்சீருடையுடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. தலையில்லாமல் கழுத்துப் பகுதி பிசிறியடித்திருந்தது.

ஓர் ஆசிரியை தலைமையாசிரியையை முண்டிக் கொண்டு உயர் காவல்துறை அதிகாரியின் முன் வந்து நின்றாள். ''எக்ஸ்க்யூஸ் மீ சார்!''

''என்ன?''

''உங்களுக்கு யார் ஃபோன் பண்ணினது?''

''மெழுகுச்சிலை சுடப்பட்டதைப் பார்த்த யாரோ தொலைபேசினார்கள்!''

''நீங்கள் எந்த போலீஸ் ஸ்டேஷன்?''

''அ... அடையாறு!''

''உங்களின் அடையாள அட்டையை கொஞ்சம் காட்ட முடியுமா?''

உயர் போலீஸ் அதிகாரிக்கு முன்கோபம் பூத்தது. ''என்ன

பொறுப்பில்லாம கேள்விகள் கேட்டுக்கிட்டுருக்கீங்க மிஸ்? டோண்ட் டிஸ்டர்ப் அவர் இன்வெஸ்டிகேஷன்ஸ்!''

''அடையாள அட்டை கேட்டா காட்ட வேண்டியதுதானே சார்?''

உயர்காவல்துறை அதிகாரி கேள்வி கேட்ட ஆசிரியையை நடுநெஞ்சில் கைவைத்து எட்டித்தள்ளினார்.

''எங்கே அந்த அருண்?''

தலைமையாசிரியை கலவரமும் நம்பாமையும் படிந்த முகத்துடன் திரும்பி அருணை அழைத்து வரச் சொன்னாள்.

உயர் காவல்துறை அதிகாரி உதவி அதிகாரிகளிடம், ''மெழுகுச்சிலையை கைப்பற்றி நமது வாகனத்துக்குள் ஏற்றுங்கள்!''

மெழுகுச்சிலை வாகனத்துக்குள் ஏற்றப்பட்டது.

அருண் வந்து நின்றான். ''என்ன சார்?''

''நீதான் அருணா? தொழிலதிபர் பிரசன்னாவின் பையனல்லலவா நீ?''

''யெஸ்!''

''வா... எங்களுடன் கிளம்பு... பாதுகாப்பாய் உன்னை இருப்பிடம் சேர்க்கிறோம்!''

''நான் எதற்கு உங்களுடன் காவல் நிலையம் வரவேண்டும். என் தந்தையை தொடர்பு கொள்ளுங்கள். அவரது ஆலோசனைப்படி நடங்கள்!''

உலாதொலைபேசியை உயிர்ப்பித்தார் உயர்காவல்துறை அதிகாரி.

''வணக்கம் சார்! நான் அடையாறு டிஎஸ்பி பேசுகிறேன்!''

''வணக்கம்!''

''உங்கள் மகன் அருணை பாதுகாப்பாய் அழைத்துக் கொண்டு உங்களது இருப்பிடத்துக்கு அரைமணி நேரத்தில் வந்து விடுகிறோம்!''

''செல்ஃபோனை அருணிடம் குடுங்கள்!''

டிஸ்பிளேயில் தந்தையின் எண் பார்த்துவிட்டு, ''டாடி!''

''எதிர் கேள்வி கேட்காம நொடி தாமதிக்காம டிஎஸ்பியோட வீடு வந்து சேர். அம்மா ரொம்ப பயந்து போய் அழுதிட்டு இருக்கா!''

''இதோ வந்திடுறேன். அம்மாவை அமைதிப்படுத்துங்க டாடி. எனக்கொண்ணும் இல்லை!''

உலாதொலைபேசியை உயர்காவல்துறை அதிகாரியிடம் அளித்தான்.

''அருண்! அதோ அந்த இரண்டாவது வாகனத்துக்குள் ஏறு!''

அருண் அந்த வாகனத்தை நோக்கி நடக்க...

பள்ளிவளாகத்துக்குள் இன்னொரு காவல்துறை வாகனம் பிரவேசித்தது. அதனை பாரத்தும் அடையாறு டிஎஸ்பி பரபரத்தார்.

பேண்ட் பாக்கட்டிலிருந்து ஒரு பிளாஸ்திரி எடுத்து அருணின் வாயில் ஒட்டினார். அருணை இருமுறை கன்னத்தில் அறைந்து டிஸ்போஸபிள் ஊசியை புட்டத்தில் செருகி இழுத்தார்.

''டேய் நிஜ போலீஸ் வந்திருச்சு! ஷூட் தெம் பிலோ தி பெல்ட்!''

போலி காவல்துறை அதிகாரிகளுக்கும் நிஜ காவல்துறை அதிகாரிகளுக்கும் துப்பாக்கிச் சண்டை ஆரம்பித்தது.



ப்யூங்! ப்யூங்! ப்யூங்!

அருணை தூக்கி வாகனத்துக்குள் போட்டுக் கொண்டு வாகனத்தை கிளப்பினான் 'அடையாறு டிஎஸ்பி'.

தோட்டாக்கள் வாகனத்தைத்துளைத்தன.

அங்குமிங்கும் போக்கு காட்டியபடி வாகனத்தால் வெளிகேட்டை உடைத்து சிதறிய படி வெளி பாய்ந்தான் 'அடையாறு டிஎஸ்பி.'

வாகனம் பிரதான சாலைக்கு பாய்ந்தது.

காவல்துறை சீருடையை உறித்தெறிந்து விட்டு வாகனத் திலிருந்தவர்கள் துரத்திவரும் ட்ராபிக் போலீஸை சுட ஆரம்பித்தனர்.

இரு ட்ராபிக் போலீஸ்காரர்கள் பைக்குடன் சிதறி சாலையோர கட்டையில் மண்டை மோதி செயலிழந்தனர்.

வாகனத்தை ஒரு சந்தில் ஓட்டி நிறுத்தி ஆயத்தமாயிருந்த இன்னொரு வாகனத்துக்குள் அருணுடன் ஏறினான் போலி காவல்துறை அதிகாரி.

புதிய வாகனம் தாம்பரம் சாலையில் பறந்தது.

நடுசாலையில் ஒரு ஹெலிகாப்டர் இறங்கி நிற்க அதில் போலி காவல்துறை அதிகாரி, அருணுடன் ஏறினான்.

ஹெலிகாப்டர் வானுயர்ந்து சல்லென்று பயந்து மறைந்தது.

டியாரா குளிர்கண்ணாடியை கழற்றி கோட்பாக்கட்டில் செருகியபடி தலைமையாசிரியையிடம் நடந்தான்.

''எவ்வளவு அனுபவசாலி நீங்க! இப்டி போலிகளிடம் ஏமாந்திட்டீங்களே? அருணின் பெற்றோருக்கு என்ன பொறுப்பாக பதில் சொல்லப் போறீங்க?''

தலைமையாசிரியை அழுதாள்.

''அருண் என் பேரக்குழந்தை மாதிரி. கிரிமினல்கள்கிட்ட ஏமாந்துக்கு மிகவும் வெக்கப்படுறேன். ஐ ரிஸைன் மை ஜாப்!''

''நீங்க உங்க வேலைய ராஜினாமா பண்ணினாலும் காவல்துறை உங்களைத் தொடர்ந்து விசாரிக்கும். ஸ்டே வித் இன் தி சிட்டி லிமிட்!''

உலாதொலைபேசி சிணுங்கியது.

டிஸ்பிளேயில் அடையாளம் தெரியாத எண்.

''இந்திய ஜேம்ஸ்பாண்ட்டுக்கு வணக்கம்!''

''யார் நீ, எதுக்காக அருணை கடத்திப் போயுள்ளாய்?''

''காரணத்தை அப்றம் சொல்றேன். மொதல்ல என் திறமையை பாராட்டமாட்டாயா? நேற்றே பிரசன்னாவின் ஒரு செல்ஃபோனை உள்ஆள் மூலம் திருடி பத்திரப்படுத்திக் கொண்டேன். அருணுக்கு சந்தேகம் வராமலிக்க எங்கள் ஆள் பிரசன்னா போல பேசினான். எங்க ஆளுக கட்டதில் எத்ன போலீஸ் நாய்கள் செத்துச்சுக டியாரா? தகவல் தெரிவிச்சா ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுவேன்!''

''பேத்தாதே!''

''இன்னொண்ணு பாரு! கிட்நாப்பிங் எபிஸோடுகளோட இலக்கணத்தையே நீ மொதல்ல மூக்கை நீட்டி கெடுத்திட்ட. மொதல்ல கடத்தினவர்கள் பணம் கேட்பார்கள். கடத்தப்பட்டவனின் உறவினர்கள் பணத்தைக் கொடுக்க மனமில்லாம போலீஸின் உதவியை நாடுவார்கள்.

போலீஸ் உள்ளே புகுந்து குட்டையைக் கிளப்பும். கடத்தினவன் வெறிகொண்டு கடத்திச் சென்றவனைக் கொல்லுவான்!''

''நீயே சொல்லிவிட்டாய் இங்கு எல்லாமே தலைகீழ் என்று. கிட்நாப்பர் என் கையால் பரிதாபமாய் சாவான்!''

''கனவு காணாதே டியாரா. உனக்கு கடுமையான எச்சரிகை விடுக்கிறேன். இந்த கேஸிலிருந்து விலகி நில். இல்லையென்றால் அருணின் பிணம்தான் அருணின் பெற்றோருக்கு கிடைக்கும்!''

''டிடக்டிவ் என்றால் ஏன் தப்பான கோணத்திலேயே பார்க்கிறாய்? ஒவ்வொரு கேஸையும் அதனதன் தனித்தன்மைக்கேற்பதான் அணுகுவேன். இங்கு நீ என்னைவிட புத்திசாலி என்றால் நான் எனது நிலையை மாற்றிக்கொள்வேன். உனக்கும் அருணின் பெற்றோருக்கும் இடையே நல்லதொரு நெகோஷியேட்டராய் நின்று நீ கேட்டதை வாங்கிக்கொடுத்து அருணை விடுவிப்பேன்!''

''நான் எது கேட்டாலும் குடுப்பாயா?'' .

''ஏன் கேட்டுப் பாரேன்!''

''உன் மனைவி ஜெருஷா வேண்டும். அனுப்புகிறாயா? அவள் என் படுக்கைக்கு வந்த கணம் அருணை விடுவிக்கிறேன்!''

''உனது தரத்துக்கு இறங்கி நான் பதில் பேச விரும்பவில்லை. என்னை எரிச்சல் மூட்டுவதை விட்டுவிட்டு நீ திட்டமிட்டிருக்கும் பணயத்தொகையைக் கேள்!''

''இப்போது நான் கேட்கவிரும்பவில்லை!''

''பின்னே?''

''பிள்ளை கடத்தப்பட்ட சோகம் முழுமையாக அருணின் பெற்றோரைத் தாக்கட்டும். அருணின் தாயார் கண்ணீர் கடலில் மூழ்கட்டும். அருணின் தந்தை அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு புலம்பட்டும். அருணை கடத்திச்சென்ற கும்பல் எது, கும்பலின் தலைவன் யாரென்று போலீஸ் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளட்டும். பேத்தாஸ் பேத்தாஸ் பேத்தாஸ். அப்ப வருவேன் கண்ணா சீனுக்கு. என்னை நீ ஏப்பசாப்பன்னு நினைச்சிராதே. நான் எலக்டரானிக்ஸ் பொருட்கள் கையாள்றதில் ஜீனியஸ். நான் எங்கிருந்து பேசறேன்னு உன்னால மோப்பம் பிடிக்கமுடியாதுடா என் மதிப்புற்குரிய வுமனைஸர் பய்யா!''

சிரித்தான் டியாரா.

''ஏன் சிரிக்ற?''

.''உன்கிட்ட எல்லா கிரிமினல்ஸ்கிட்டயும் இருக்கும் வீக்னெஸ் இருக்கு!''

''என்ன என்ன என்ன?''

''அளவுக்கு அதிகமா பீத்திக்கிற. பீத்திக்கிற சமயத்ல என்ன உளர்றோம்னு நிகரில்லாம கூடுதல் தகவல்களை எனக்கு டிப்ஸா தருகிறாய்!'' எதிர்முனை மரித்தது.

''ஐ வில் ட்ராப் யூ பாஸ்டர்ட்!'' தரையை வெறித்தனமாக உதைத்தான் டியாரா.



# 4

ஹெலிகாப்டர் ஒரு மொட்டை மாடியின் மீது போய் நின்றது. இறக்கை சுழற்சி நிற்க பல நிமிடங்களாகின.

அவன் அருணைத்தூக்கிக் கொண்டு இறங்கினான்.

சகாக்கள் ஓடிவந்தனர். அருணை ஏந்திக் கொண்டனர்.

படுக்கையறையில் கிடத்தப்பட்டான் அருண். அங்கு கிட்பேக்குடன் காத்திருந்த மருத்துவர் அருணை பரிசோதித்தார். மயக்கம் தெளிய இன்ஜக்ஷன் செலுத்தினார்.

ஒரு செவிலியர் நங்கை அருணின் ஆடைகளை அகற்றினாள். அருணின் கழுத்திலிருந்த மைனர்செயின், இடதுமணிக்கட்டில் இருந்த வாட்ச், வலுது மணிக்கட்டில் இருந்த சாமிக்கயிறு, இடுப்பிலிருந்த வெள்ளி அரைஞாண் கயிறு அகற்றினாள். சவரக்கத்தி வைத்து அருணுக்கு மொட்டையடித்துவிட்டாள். வாய் பிளாஸ்திரி அகற்றப்பட்டது.

சிறுநீர் குவளை, மலக்குவளைகளை ஆயத்தமாய் அறையோரம் வைத்தாள்.

இரும்புக்குண்டு இணைந்த இரும்புச்சங்கிலியை காலில் இணைத்தாள்.

மயக்கம் தெளிந்த அருணின் உதடுகள், ''ம்மா! ம்மா!''

செவிலியர் நங்கை, ''என்ன அருண்?''

அருண் மிரளமிரள விழித்தான். ''யார் நீ?''

''நான் உன்னை கவனிக்க அமர்த்தப்பட்டிருக்கும் நர்ஸ் தம்பி!''

''நான் எங்க இருக்கேன்?''

''இருக்கவேண்டிய இடத்ல பத்திரமா இருக்க!''

''நான் எங்கம்மாவைப் பாக்கனும்!''

''நல்லாக்கவனி அருண். இந்தக்காலத்தில் நாலாவது படிக்கறவனுக்கு தெரியாத விஷயமே இல்லை. உன்னை பலத்த இரத்தச்சேதத்தோட எங்க முதலாளி கடத்திட்டு வந்திருக்காரு. இங்க நீ பணயக்கைதியா இருக்க. இனி எங்க முதலாளிக்கும் உங்க பெற்றோருக்கும் பேச்சுவார்த்தை நடக்கும். உன் மேல உன் பெற்றோர் உண்மையான பாசம் வச்சிருக்காங்கன்னா எங்க முதலாளி கேக்ற தொகையைக் குடுத்து மீட்டுக்குவாங்க. இல்லேன்னா... ''நிறுத்தினாள்.'' இல்லேன்னா கடவுள் விட்டவழிதான்!''

''கிட்நாப்பிங் பண்ற உங்களுக்கும் கடவுளா?''

''அவரவருக்கு ஒரு நியாயம் இருக்கும். எங்கள் நியாயம் கடவுள் சார்ந்தது என நாங்கள் நம்புகிறோம். அதை நீ விமர்சிக்கக்கூடாது! நீ இங்கிருந்து போகும்வரை எனது கட்டளைகளை மீறக்கூடாது. உனக்கு தினம் கலோரியும் கொழுப்பும் கட்டுப்படுத்தப்பட்ட உணவுதான் வழங்குவேன். அறைக்குள் நீ நேரத்தை அறிய முயற்சிக்க கூடாது. டிவியில் வெறும் ஒளியும் ஒலியும் தான் போடுவேன். இங்கிருக்கும்வரை நீ

உள்ளாடை இல்லாத நீள் அங்கிதான் உடுத்தவேண்டும். அழக்கூடாது. வம்புதும்பு கூடாது. தப்பிக்க எவ்வித முயற்சியும் பண்ணக்கூடாது. சாப்பிடமாட்டேன் என்று அடம்பிடிக்கக்கூடாது. என்னையையோ உன்னை பார்க்க வருபவரையோ எதுவும் நீ வசைபாடக்கூடாது. சாப்பிடும் நேரம் தவிர மீதி நேரம் உன் வாயில் பிளாஸ்திரி ஒட்டப்படும். கண்கள் கறுப்புத்துணியால் மூடப்படும்!''

''நீங்க தீவிரவாதிகளா ஆன்ட்டி?''

''இந்த ஆன்ட்டி கீன்ட்டியெல்லாம் கூப்பிடாதே. உனக்கும் எனக்கும் என்ன உறவு முறை? சிஸ்டர் என்று கூப்பிடு!''

''சிஸ்டர்ன்ற வார்த்தையும் உறவுமுறை சார்ந்தது தானே?''

''சரி, நர்ஸ் என்று கூப்பிடு!''

''ஓகே நர்ஸ்!''

''நான் சொன்னதுக்கு எதிர்மாறா ஏதாவது நடந்தன்னு வச்சுக்க- என்ன பண்ணுவேன் தெரியுமா?''

''தெரியலையே?''

''ரிவால்வர் எடுத்து சுட்டுருவேன்!'' ரிவால்வர் எடுத்துக்காட்டினாள் செவிலியர் நங்கை. அவளது கண்களில் உண்மையான கொலை வெறி மிளிர்ந்தது.

சந்தியா அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தாள். அவளை சமாதானப்படுத்த பலவிதமாய் முயற்சித்துத் தோற்றான் பிரசன்னா.

''கடவுளே! கடவுளே! கடவுளே! என் அருணுக்கு என்னாச்சோ... இப்ப எப்டி இருக்கானோ? அவனை கடத்திட்டு போகும்போது அடிச்சிருக்காங்களே கிட்நாப்பர்ஸ்? மறைவிடத்துக்குக் கொண்டு போய் என்னென்ன செஞ்சாங்களோ தெரியலையே? காலைலயே பார்சல் வந்தவுடனே நாம முழிச்சிக்க வேணாம்? முன்னெச்சரிக்கையா அருணை இன்னைக்கு பள்ளிக்கு அனுப்பாம இருந்திருக்கலாமே? அருண்! அருண்!'' முகத்தில் அறைந்து கொண்டாள். தலைக் கேசத்தை பிய்த்துக்கொண்டாள். நெஞ்சில் ரப்ரப் என்று அடித்துக் கொண்டாள். கீழே விழுந்து புரண்டாள். கையில் கிடைத்தவற்றை போட்டு உடைத்தாள்.

சமாதானப்படுத்த முயன்ற கணவனை ஏசினாள். ''தொழில் தொழில்னு நீங்க பாட்டுக்கு எதிரிகள் எண்ணிக்கையை கூட்டிட்டு போய்ட்டீங்க. இப்ப எந்த எதிரி என் மகனை கடத்தினான்னே தெரியலையே. அவங்க என் மகனை பணத்துக்கு கடத்னாங்களா, பழி தீர்த்துக்க கடத்தினாங்களா? என் மகனுக்கு மட்டும் எதாச்சும் ஆச்சு என்னை நீங்க உயிரோடயே பாக்க முடியாது!''

''அருணுக்கு ஒண்ணும் ஆகாது சந்தியா... சற்றே அமைதிப்படு. எதிரியே இல்லாம இருக்கனும்னா செத்தசவமா கிடக்கனும்-முடியுமா? என்னால் முடியாது! உன்னால முடியுமா? அருணை கிட்நாப்பர்ஸ் பணத்துக்காகத்தான் கடத்திட்டு போயிருக்காங்க. கவலையேபடாதே. நம்ம சொத்தை முழுதும் கிட்நாப்பர் காலடில அருணை துரும்பு சேதமில்லாம மீட்டு வருவேன்!''

பாய்ந்து கணவனைக் கட்டிக் கொண்டாள் சந்தியா. ''நிஜம்மா? நிஜம்மா? என் மகனை உயிரோட, மீட்டுத்தந்திருவியா?''

''என்ன இப்டிக்கேக்ற? அருண் எனக்கும் மகன் இல்லையா? உனக்கு பெண்ணுன்னு லைசென்ஸ் இருக்கு. அழுது ஆர்ப்பாட்டம் பண்ற. நாங்கள் ஆண்கள்-அழக்கூடாதுன்னு ஒரு எழுதப்படாத சட்டம் இருக்கு. அதுக்கு இணங்கி மௌனமா குமைஞ்சு நிக்றேன்.''

''எனக்கு எங்கம்மாப்பாவை பாக்கனும் போல இருக்கு!''

''ஃபோன் பண்ணிட்டேன். கார்ல வந்துக்கிட்டு இருக்காங்க!''

சன்டிவியை உயிர்ப்பித்தான். 'பிரபல தொழிலதிபர் பிரசன்னாவின் ஒரே மகன் அருண் கடத்தல்!' ஸ்க்ரோலிங் ஓடியது.

டியாரா வரவேற்பறையில் காத்திருந்தான். உடன் தேவா.

பத்து நிமிடம் கழித்து வெளிப்பட்டான் பிரசன்னா. ''வணக்கம்!''

''வணக்கம் மிஸ்டர் பிரசன்னா. வி ஆர் ஸ்டார்ட்டிங் அவர் பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன்ஸ். நேற்று உங்க செல்போனை உங்க அலுவலகத்ல திருடினது உங்களின் மூத்த உதவியாளர் ரத்ன சம்பத். அவனைப் பற்றி விசாரிப்பது தெரிந்தும் ஆள் மாயமாகி விட்டான். தாம்பரத்தின் எந்த யூனிட்டையும் சேர்ந்தது அல்ல அருணை கடத்த உபயோகப்படுத்தப்பட்ட ஹெலிகாப்டர். பூச்சி மருந்து தெளிக்கும் கம்பெனிகளுக்கும் அது சொந்தமானதல்ல. வெளிமாநிலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். கர்நாடக போலீஸை தொடர்பு



சிறந்த இசைக்கலைஞர்களுக்காக வழங்கப்படும் 'கிராமபோன் அவார்டை (GRAMMY AWARD) அதிகம் பெற்று உலக சாதனை படைத்துள்ள நோரா ஜோன் என்ற இவர் ஒரு இந்தியர் என்பது நம்மில் பெரும்பாலானோர்க்குத் தெரியாது! வீணை மேதையான ரவிசங்கரின் இளைய மகளான இவர் நியூயார்க்கில் நடைபெற்ற சிறந்த கலைஞர்களுக்கான கிராமபோன் வழங்கும் விழா வில் எட்டு அவார்டுகளைப் பெற்றபோது கூடியிருந்த எல்லோரும் பெரிதும் வியப்படைந் தனர்! எதிர்பாராமல் கிடைத்த இந்த வெற்றியால் அதிர்ச்சியுடன் காணப்படும் நோரா ஜோனை இங்கே பாருங்கள்!

-இளசை ஜமால், ரியாத்

கொண்டுள்ளோம். உங்கள் அலுவலகத்தின் உங்கள் இருப்பிடத்தின் பணியாளர்களை எனது உதவியாளினிகள் விசாரித்துக் கொண்டு இருக்கிறார்கள்!''

வெறுமைமுகம் காட்டினான் பிரசன்னா.

''மிஸ்டர் பிரசன்னா! உங்களிடம் சில கேள்விகள்!''

''இந்த நிலையிலா?''

''யெஸ்!''

''கேளுங்க!''

''அரசியல் கட்சிகளுக்கு நீங்க நன்கொடை வழங்குவது உண்டா?''

''உண்டு!''

''எந்த அடிப்படையில்?''

''ஆளும் கட்சிக்கு அதிகமாக. எதிர்கட்சிக்கு சற்றுக்குறைவாக. உதிரிகட்சிகளுக்கு கொஞ்சம் கொஞ்சம்!''

''ஆளும் கட்சிக்கோ பிரதான எதிர்கட்சிக்கோ நீங்கள் கொடுத்து வந்த நன்கொடையை எக்காரணத்தை முன்னிட்டாவது நிறுத்னீர்களா?''

யோசித்தான் பிரசன்னா. ''ஆ... ஆமாம்!''

''எந்தக்கட்சிக்கு?''

''வெள்ளைவேழங்கள் கழகம்!''

''எதற்காக நிதியளிப்பை நிறுத்னீர்கள்?''

''அக்கட்சி சில தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவு தருவது கண்டு பயந்து!''

''நீங்க இந்தக் காரணத்துக்காக நிதி தர மறுத்தது அந்த அரசியல்கட்சி ஆதரித்த தீவிரவாத அமைப்புக்குத் தெரிந்திருக்குமா?''

''யெஸ்... தெரிந்திருக்க வாய்ப்புண்டு டியாரா?''

''நான் கேட்கும் கேள்விகள் எல்லாம் ஆஃப் தி ரெக்கார்ட்தான், வெள்ளை வேழங்களுக்கு நீங்க வருஷா வருஷம் தந்த நிதித்தொகை எவ்வளவு?''

''அ... அம்பது லட்சம்!''

''உங்கள் தொழில் சார்ந்த எதிரிகளாக யாராரை கருதுகிறீர்கள்?''

பட்டியலிட்டான் பிரசன்னா.

''இதில யாரையாவது கடந்த ஒரு வருடத்தில் திட்டமிட்டு பழி வாங்கியது உண்டா?''

''ஒரு சிலரை பணரீதியாய் நஷ்டப்படுத்தியிருக்கிறேன்!''

''அந்த சிலர் யாரார்?''

பட்டியலிட்டான் பிரசன்னா.

தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள் பிரசன்னாவுக்கு வந்து குவிய ஆரம்பித்தன.

''ஐ எம் வெரி வெரி ஸாரி பிரசன்னா. உங்களது கவலையில் நாங்களும் பங்குகொள்கிறோம். உங்கள் பையன் கட்டாயம் கிடைத்துவிடுவான்!''

''வேதனைப்படுறோம் பிரசன்னா. இந்த நேரத்தில் நீங்கள் உங்கள் மனைவியின் மனம் உடைந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!''

''இந்த ஆட்சியில் க்ரைம் ரேட் தாறுமாறாய் எகிறிவிட்டது. என்ன



செய்ய? தலைவர் உங்களுக்கு தனது தனிப்பட்ட வருத்தத்தை தெரிவிக்க சொன்னார்!''

''பிரசன்னா! போலீஸை நம்பி இருந்துவிடாதே. அவர்கள் போலி என்கவுன்ட்டர்களுக்குத்தான் லாயக்கு. கிட்நாப்பர்ஸ் கேக்கும் தொகையை தயங்காம குடுத்திடு. பணம் போனா சம்பாதிச்சிக்கிடலாம். மகன் போனா?''

''குருப்பெயர்ச்சி உங்க ராசிக்கு சாதகமா இல்லைன்னு அப்பவே சொன்னேன் கேட்டீங்களா? அன்னைக்கே நீங்க குடும்பத்தோட மாசாணியம்மன் கோயிலுக்குப் போய் வந்திருக்கனும்!''

டியாராவிடம் ஒரு காவல்துறை அதிகாரி கட்டைவிரல் உயர்த்தினார். ''பிரசன்னாவுக்கு வரும் அனைத்து இன்கம்மிங் கால்களும் பதிவு செய்யப்படுகின்றன!''

-போர்டிகோவில் ஒரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து ஒரு வயோதிக தம்பதியினர் இறங்கினர்.

''சந்தியா! உங்கம்மாப்பா வந்திட்டாங்க!''

அவ்வளவுதான்... சந்தியா கால்களால் பறந்தோடி பெற்றோரை கட்டிக்கொண்டு கதறியழுதாள்.

சந்தியாவின் தந்தை ராஜாராமன் விசும்பினார். ''பிஸினஸ்ல எனக்கு பல கோடி நஷ்டம். அந்த அடி கூட என்னை பெரிசா தாக்கல. என் அன்பு பேரனை. ஆசை பேரனை கடத்திப் போய்ட்டாங்கன்ற செய்தியை கேள்விப்பட்டதும் என் மனசு தாங்கலையேம்மா!''

''எந்த பாவிபரப்பான் என் பெயரனை கடத்னான்? கடத்தினவன் கைல புத்து மொளைக்க!'' பாட்டி.

தொலைபேசி சிணுங்கியது. ஒலிவாங்கியை கையில் எடுத்தான் பிரசன்னா. ''எவ்வளவு பணயத்தொகை கேக்றதுன்னு முடிவு பண்ணலிட்டேன். அடுத்த காலுக்கு காத்திரு!'' தொடர்பு அறுந்தது.

## 5

அடுத்தத்தொலைபேசி அழைப்புக்காக இரண்டு மணிநேரம் காத்திருந்தனர் டியாராவும் பிரசன்னாவும்.

தொலைபேசி சிணுங்கியது. எடுத்தால் அடங்கியது.

மும்முறை போக்கு காட்டியபின் தொலைபேசி உயிர்த்தது. ''ஹலோ!''

முதலில் பேசிய குரலுக்கும் இப்போதைய குரலுக்கும் வித்தியாசம் தெரிந்தது. ''ஹலோ!''

''என்ன பிரசன்னா. முழிக்ற? மொதல்ல பேசின குரல்வேற இப்ப பேசற குரல் வேறன்னு முழிக்றியோ? டிஸைனர் சர்ட் கேள்விபட்டிருப்ப! இது டிஸைனர் வாய்ஸ். என்னுடைய குரலை நூறு விதமா என்னால் டிஸைன் பண்ணமுடியும். ஓகே விஷயத்துக்கு வருவம். உன்னைச் சுற்றிப்

போலீஸ் கும்மியடிக்றது எனக்கு அறவே பிடிக்கல. இந்த டியாராபய ஒரு தோசிபய. எந்த கேஸ்ல புகுந்தாலும் பிணம் பாக்காம திருப்தியாக மாட்டான்!''

''போலீஸை விலக்கிக்கிறேன். ஆனா என் சார்பாக டியாரா செயல்பட அனுமதி!''

''அவன்கிட்ட போனைக்குடு!''

டியாரா ஒலிவாங்கியை வாங்கினான்.

''தேஜி ஸிஜாகிட்ட ஜொள்ளுவிடாம என் பிராணனை ஏன் வாங்ற? பிரசன்னாவுக்கு வரும் தொலைபேசி உலாதொலைபேசி இன்கமிங் அவுட்கோயிங் கால்களை ஒட்டுக்கேக்ற! பிரசன்னா எந்தெந்த அரசியல்கட்சிக்கு டொனேஷன் பண்ணினான்னு விசாரிக்ற! உன்னை நெகோஷியேட்டரா எப்படி நான் அனுமதிக்கிறது!''

''உன்னை எப்டி கூப்டுறது? மிஸ்டர் எக்ஸ்ன்னு கூப்பிடுறேன். எக்ஸ்! சில தொழில்களுக்கு இடைத்தரகர் அதி அவசியம். எங்க பார்ட்டிக்கு சிறுகாயமும் இல்லாம அருண் தேவை. உனக்கு பணயத்தொகை வேணும். எனக்கு ரெண்டு பேரையும் திருப்திபடுத்தின சாகசம் தேவை. என்னுடைய போலீஸ் சகாக்கள் விலகிக்கொள்வர். நானும் 'டிடக்டிவ்' எனும் கோதாவை விட்டுட்டு நெகோஷியேட்டர் வேலை மட்டும் பாக்றேன்!''

''நீ சொல்றது உண்மைன்னா சத்தியம் பண்ணு!''

''என் மனைவி, குழந்தையின் மீது சத்தியம்!''

''உன் எழுத்தின் மீது சத்தியம் செய். சத்தியத்தின் மீது 'அ' சேர்க்காதே. சத்தியம் மீறுன உன்னோட எழுத்து சக்தி பறிபோய்டும்!''

''எழுத்து தேவதையின் மீது சத்யமாக இந்த கேஸில் நல்லதொரு நெகோஷியேட்டராகச் செயல்படுவேன்!''

''அய்யே... உன் சத்தியம் வழவழா கொழகொழா. நான் சொல்லும் வாசகம் வேணும்!''

''வாசகம் என்ன?''

''நெகோஷியேட்டர் போர்வையில் கிட்நாப்பரின் நலனுக்கு ஊறுவிளைவிக்க முயற்சிக்க மாட்டேன்!'' - இதச்சொல்லு!''

சொன்னான் டியாரா.

''பணயத்தொகை எனக்கு அம்பது கோடி வேணும் டியாரா!''

''தொகை அதிகமாயிருக்கே!''

''பிரசன்னாவின் சொந்த மதிப்பில் இதுவெறும் பத்து சதவீதம். கொடுத்தால் ஒன்றும் அவன் குறைந்துவிடமாட்டான். சரியாக முடிச்சுக்குடு டியாரா... உனக்கு புரோக்கர் கமிஷன் அரை பர்சன்ட் அதான் ரெண்டரை கோடி தந்திடுறேன்!''

''எனக்கு வேணாம். அதையும் நீயே வச்சுக்க. அம்பது கோடி ரூபா என்பது உன் இறுதி முடிவா? இதிலிருந்து எதுவும் நீ இறங்கி வரமாட்டாயா?''

''பேட்டா விலை மாதிரி நாப்பத்தி ஒம்பது கோடியே தொண்ணூத்தி ஒம்பது இலட்சத்து தொண்ணூத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரமா



குடுக்கச் சொல்லு. மொத்தத்ல நூறு ரூபா குறைச்சிக்கலாம்!''

''கவுண்டமணிக்கு சொந்தக்காரனா நீ?''

''சேச்சே... மதுரைக்காரன் விவேக்கோட தம்பிப்பா நான்...''

''உன்னை மாதிரி தம்பி வாய்ச்சா எந்த அண்ணனுக்கும் காமடிநடிப்பு வராது. சோகநடிப்புதான் வரும்!''

''பேச்சை ட்ராக் மாற்றாதே!''

''அருண் இப்போது எப்படி இருக்கிறான் என்பதை எங்களுக்கு காட்டு!''

''டியாரா! பிரசன்னாவின் கம்ப்யூட்டரை உயிர்ப்பி! மீண்டும் அரைமணிநேரம் கழிச்சு பேசுவம்!'' கம்ப்யூட்டரை 'ஆன்' பண்ணினான்.

''நெட்டில் மேய்!''

''மேய்றேன்!''

''பிரசன்னாவின் மின்னஞ்சல் முகவரிக்கு நான் அனுப்பியிருக்கும் விடியோ மெயிலை கண்டுகளி!'' விடியோமெயில் பார்வைக்கு வர-

பிரசன்னா, சந்தியா, சந்தியாவின் பெற்றோர் ஒரு சேர விடியோ மெயிலைப் பார்த்தனர்.

அதில்-

*மொட்டையடிக்கப்பட்டு அரபுஷேக் போல தொளதொள அங்கி அணிந்த அருண் பேசினான். ''மம்மி! டாடி! இங்க என்னை பலிகுடுக்ற ஆட்டை நல்லா பாத்துக்கிறமாதிரி நல்லா பாத்துக்கிறாங்க. சோயாபீன்ஸ் சார்ந்த உணவை வழங்குகின்றனர். என்னை விடுவிக்க நிறைய பணம் கேட்பாங்க போல. குடுக்காதீங்க. எதுக்கு குடுக்கனும்? நாம குடுகிற பணத்தை வச்சு என்னென்ன தீய செயல் செய்வாங்களோ? அந்த தீய செயல்களால் தமிழ்நாட்டு மக்களுக்கு கெடுதினா நான் பணம் குடுத்து தப்பிச்சு உயிர் வாழறது எவ்வளவு பெரிய பாவச்செயல். ஒரு பைசா குடுக்காதீங்க. என்னைக் கொன்னா கொன்னுட்டு! போறாங்க. அடுத்த பிறவிலயும் உங்க ரெண்டு பேருக்கும் மகனாத்தான் பிறப்பேன். டாடி! அம்மாவை அழவிடாம பாத்துங்கங்க. உங்களைவிட உயரமாய் என் கொடி பறக்குமாம். நான் உயிரோட இல்லைன்னா என் கொடி எப்படி பறக்கும். தரையோடு தரையாத்தான் கிடக்கும்!''*

விடியோகிளிப்பிங்கில் நாளும் நேரமும் குறிப்பிடப்பட்டிருந்தது. 6.10.2003 20:42:44 கிளப்பிங் பார்த்ததும் சந்தியா ஓங்கி அழுதாள். சந்தியாவின் தாயார் மயங்கி விழுந்தார். மருத்துவர் ஓடிவந்தார். நாகம்மாளுக்கு இரத்த அழுத்தம் சோதித்து இன்ஜக்ஷன் பண்ணினார்.

-மீண்டும் தொலைபேசி அழைத்தது.

''என்னப்பா டியாரா! விடியோமெயில் பாத்துட்டு பங்களாவுக்குள்ள ஒரே ஒப்பாரி போல. அருணின் பாட்டி "மயங்கி விழுந்துட்டான்னு நினைக்கறேன். கிழவிக்கு பாத்து ட்ரீட்மென்ட் பண்ணுங்க. பாட்டி பரலோகம் பறந்திரப் போகுது!''

''இது உனக்கு தேவையில்லாதது. குப்புறத்தள்ளிய குதிரை குழியும் பறிக்கக்கூடாது மிஸ்டர் எக்ஸ்! உனக்கு பணம் குடுக்க எங்களுக்கு தேவையான அவகாசம் தேவை!''



''ஆறு மணி நேரம்?''

''நோ!''

''பனிரெண்டு மணி நேரம்?''

''நோ நோ!''

''பின்ன?''

''நாப்பத்தியெட்டு மணி நேரம் தேவை.''

''அதிகம் டியாரா. இருபத்திநாலு மணி நேரம்?''

''முப்பத்தி ஆறு மணி நேரம்?''

'அவகாசம் குடுக்கலாம். ஆனா அந்த அவகாசத்துக்குள்ள நீ எதுவும் கிருத்துருவம் பண்ணாம இருந்தா சரி!''

''பண்ணமாட்டேன்!''

''அப்றம் ஒரு முக்யமான விஷயம்! அம்பது கோடியை நீ பணமாக தரவேண்டாம்!''

> நீங்கள் பொய் பேசினால் உடனே கண்டுபிடித்து அலாரம் மணி அடித்துக் காட்டிக் கொடுக்கும் அதிசயமான கருவி ஒன்றை தென்கொரியாவின் 911 கம்ப்யூட்டர் கம்பெனி தயாரித்து அறிமுகம் செய்துள்ளது! அதையே நமக்கு அறிமுகம் செய்கிறார் தாகியூடாகூகி என்ற இந்தக் கம்பெனி ஊழியர்.' 'ஹேண்டி டிரஸ்டர்' என்ற பெயருடைய அதிசயக் கருவி அடுத்த மாதமே விற்பனைக்கு வருகிறது!
>
> –இளசை ஜமால், ரியாத்

''வேறெப்படி?''

''ஹைதாரபாத் நிஜாமோட வாரிசு ஒருத்தன் ஹைதராபாத்ல இருக்கான். அவன்கிட்ட அம்பது கோடி பெறுமானமுள்ள வைரம் இருக்கு. அதை விலைக்கு வாங்கி என்கிட்ட குடுத்திரு. டூப்ளிகேட் கீப்ளிகேட் தரமுயற்சிக்காதே!''

''அந்த நிஜாமோட வாரிசு தன்னுடைய வைரத்தை விலைக்கு தர சம்மதிக்கனுமே?''

''அவன் கஷ்டஜீவனத்ல இருக்கான். போய் பாத்து பேசி வைரத்தை விலைக்கு வாங்குங்க. எப்டி பேசனும்னு கூட நானா சொல்லித்தரமுடியும்?''

''சரி, வைரத்தை வாங்கிக்கிட்டு!''

''நீங்க வைரத்தை வாங்கினவுடனே நானே உங்களை தொடர்பு கொள்வேன். வைரத்தை எந்த இடத்ல எப்ப தந்து பையனை மீட்டுக்கிரனும்ன்றதை அப்ப பேசும்போது சொல்லுவேன்!''

''ரைட்டோ!''

''மீண்டும் சொல்றேன் டியாரா. நான் ஜோவியலா பேசறதை வச்சு



என் சீரியஸ்னெஸ்ஸை குறைச்சு மதிப்பிட்றாதே. ஐ எம் தி மோஸ்ட் டேன்ஜரஸ் கல்பிரிட் இன் தி வேர்ல்டு. வயலென்ஸ் நா பண்ண ஆரம்பிச்சா ஒரே ரெத்தக்களறிதான்!''

தொலைபேசி பேச்சை ஒட்டுகேட்டு பதிவு செய்யும் அதிகாரி ஓடி வந்தார். ''கிட்நாப்பர் தன்னுடைய பேச்சை ஸ்கிராம்ப்ளிங் பண்றான் சார். இதுவரைக்கும் என்னால அவன் பேச்சை டிஸ்கிராம்ப்ளிங் பண்ண முடியல. சிதைஞ்சு சிதைஞ்சு வர்ற அர்த்தமில்லாத குரல் கூட ஒரிஜினல் இல்லை. கம்ப்யூட்டரைஸ்டு டிஜிட்டல் வாய்ஸ். ஒரு வாய்ஸ் நாலு கட்டைல இருந்தா அரை மணிநேரம் கழிச்சு பேசற வாய்ஸ் ஏழு கட்டைல இருக்கு...'' சொல்லிக்கொண்டே போனார்.

டியாரா அவரது பேச்சை அலட்சியம் செய்தபடி தேவாவின் காதுகளில் ஏதோ முணுமுணுத்தான். பங்களா முழுக்க சுற்றினார்.

மொத்தமாய் மேஜையில் கொட்டினார் தேவா.

''பக்கிங் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் டியாரா. ஒட்டு கேட்கும் கருவிகள். நாம் பேசுவதை கிட்நாப்பர் இவைகள் மூலமாகவே கேட்டிருக்கிறான்!''

''ஓ மைகாட்!''

''பங்களாவுக்குள்ளிருக்கும் பணியாட்களில் சிலர் கிட்நாப்பருக்கு உடந்தை தேவா!''

''என்னால நம்பமுடியல டியாரா. எனது பணியாட்கள் எனக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ணுவார்களா?''

''பணமே பிரதானம் என்கிற உலகில் நம்பிக்கைத்துரோகம் சர்வசாதாரணம் 21 ஆம் நூற்றாண்டில் யூதாஸ்களின் எண்ணிக்கை பல கோடிகள் தேறும்!''

''நெக்ஸ்ட் டியாரா!''

''நாம் குறுக்கு வழி எதுவும் கையாளவேண்டாம். நமக்கு அருண் உயிருடன் தேவை. அந்த ஹைதராபாத் நிஜாமின் வாரிசுடன் தொடர்பு கொள்ளுங்கள்!''

தொடர்பு கொண்டான் பிரசன்னா.

எதிர்முனையில் நிஜாம் வாரிசின் உதவியாளர் உருதுவில் பேசினார். ''ஹாஜி காஷ்மீர் போயிருக்கிறார். காஷ்மீரில் அவர் எங்கு தங்கியிருக்கிறார் என்பது எனக்குத்தெரியாது!''

மானசீகமாய் இடிந்து நொறுங்கிப் போனான் பிரசன்னா. மேலும் பல ஏமாற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ திட்டமிட்டு காத்திருந்தன!

## 6

**ஹை**தராபாத் நிஜாமின் வாரிசின் பங்களாவுக்கு இம்முறை தொலைபேசினான் டியாரா.

''ஹலோ ஹாஜி இருக்கிறாரா?''

''நீங்கள் யார்? ஆங்கிலத்தில் பேசினால் எனக்கு புரியாது. உருதுவில்

அல்லது ஹிந்தியில் பேசுங்கள்!''

உருதுவுக்கு மாறினான் டியாரா.

தன்னைப்பற்றியும் அருண் என்கிற சிறுவன் கடத்தலைப் பற்றியும் வைரத்தை உடனே விலைக்கு வாங்கவேண்டிய அதிஅவசியம் பற்றியும் விளக்கினான்.

''மன்னிக்க வேண்டும். மீண்டும் கூறுகிறேன் ஹாஜி காஷ்மீர் போயிருக்கிறார்!''

''என்ன விஷயமாய்?''

''தெரியாது!''

''திரும்பி வர எத்தனை நாளாகும்?''

''ஒரு மாசமாகும்!''

''அரே அல்லாஹ்! உடனே அவரை நாங்க தொடர்பு கொண்டாகவேண்டும். காஷ்மீருக்கு போனால் எங்கே தங்குவார்?''

''ஏதாவது ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில்!''

''அவரது முழுப்பெயர் என்ன? அவரது புகைப்படம் ஒன்றை எங்களுக்கு நீங்கள் பேக்ஸோ விடியோ மெயிலோ பண்ண முடியுமா? தொலைநகல் முகவரியும் மின்னஞ்சல் முகவரியும் தந்தான். ''ப்ளீஸ்! இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீங்க. ஒரு சிறுவனின் உயிர் வைரத்தால் அல்லாடிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு நீங்க இந்த சிறுவனுக்கு உதவினா நாளைக்கு உங்க மகனுக்கு அல்லாஹ் உதவுவான்!''

அடுத்த பத்து நிமிடத்தில் தொலைநகல் இயந்திரம் கிர்ரக் கிர்ரக் என்று ஹாஜியின் புகைப்படத்தைத் துப்பியது.

காஷ்மீர் காவல்துறைக்கு புகைப்படத்துடன் தகவல் குறித்து இணைத்து தொலைநகர் செய்தான் டியாரா.

*புகைப்படத்தில் இருப்பவரின் பெயர் ஹாஜி உஸ்மான் அலி பாதுஷா. இவர் காஷ்மீரின் ஏதாவது ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருக்கக்கூடும். உடனே இவரை தொடர்பு கொண்டு கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணில் பேசச் சொல்லுங்கள். 044/22248968. அல்லது இவரது தொடர்பு எண்ணை பெற்றுத்தாருங்கள்!*

அடுத்து முப்பது நிமிடத்தில் காஷ்மீர் காவல்துறையிடமிருந்து தெலைபேசி அழைப்பு வந்தது.

''ஹாஜி தங்கியிருக்கும் நட்சத்திர ஹோட்டலை கண்டுபிடித்து விட்டோம். ஆனால் ஒரு அதிர்ச்சியான செய்தி. சில நிமிடங்களுக்கு முன் ஒரு கார்பாம் வெடித்து இருபதுக்கும் மேற்பட்ட டூரிஸ்ட்கள் இறந்துவிட்டார்கள். அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம். இறந்தவர் பட்டியலில் உள்ளாரா? அல்லது காயப்படாமல் தப்பித்தவர்கள் பட்டியலில் உள்ளாரா? - என தேடிப்பார்க்க வேண்டும்!''

''ஓகே. உங்கள் முயற்சிகளை ஒளிவேகத்தில் மேற்கொள்ளுங்கள்!''

''எதற்கும் இன்னும் இரண்டு மணிநேரத்தில் தொடர்பு கொள்கிறோம்!''

''நீங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு நன்றி!'' ஒலிவாங்கியை வைத்தான் டியாரா.

உலாதொலைபேசி அழைத்தது.

எதிர்முனையில் கிட்நாப்பர்!''

''ஹலோ டியாரா!''

''ஹலோ உன்னை எக்ஸ் என்று அழைக்க எரிச்சலாய் இருக்கிறது. பொய் பெயராக இருந்தாலும் ஒரு பெயர் சொல்லு. அந்த பெயராலேயே உன்னை அழைக்கிறேன்!''

''விஸ்வா என்று என்னை அழை!''

''விஸ்வா! அந்த ஹைதராபாத் நிஜாமோட வாரிசை தொடர்பு கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.'' நடந்ததை முழுக்க விவரித்தான் டியாரா. ''இதுவரை மேற்கொண்ட முயற்சிகளிலேயே ஆறுமணி நேரம் கரைந்துவிட்டது விஸ்வா.''

விஸ்வா சீறினான். ''சாக்கு போக்கு சொல்லாதே. உன் கதையை பத்திரிகைகளில் எழுது. என்னிடம் சொல்லாதே. அருண் வேணுமின்னா காஷ்மீருக்கு பறந்து அந்த ஹாஜியை ஹைதராபாத் தூக்கி வந்து வைரத்தை விலைபேசி சென்னைக்கு கொண்டு வர வேண்டியதுதான்!''

''நாம் அடுத்த முறை பேசுவதற்குள் உனக்கு நான் நல்ல தகவல் கூறுகிறேன்!''

''கோ டு தி ஹெல்! நான் குடுத்த டெட்லைனை எக்காரணம் முன்னிட்டும் மாற்றமாட்டேன். அடுத்த ஆறுமணி நேரத்தில் நான் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லைன்னா அருணோட வலது கட்டைவிரலை கட் பண்ணி அனுப்புவேன். ஒவ்வொரு ஆறுமணிநேரத்துக்கும் ஒரு உடல் உறுப்பை கட்பண்ணி அருணின் பெற்றோருக்கு அனுப்புவேன். முப்பதியாறுமணி நேரம் முடிந்த நொடி அருணைக்கொன்று அவனது தலையை உங்களுக்கு பார்சல் பண்ணி அனுப்புவோம்!''

''ஓகேஓகே விஸ்வா. எல்லாம் சரி. இப்போது என்ன சன் டிவி நிர்மலா பெரியசாமி குரலில் பேசுகிறாய்?''

''இதுவும் என் டிஜிட்டல் சாகசம். வேறென்ன குரல் வேண்டும் உனக்கு? அடுத்த தடவை உசிலைமணி குரலில் பேசவா?''

தொடர்பு அறுந்தது.

தேவா ஓடிவந்தார். ''காஷ்மீரில் இருந்து கால்!''

ஒலிவாங்கியை கையிலெடுத்தான் டியாரா.

''ஹலோ தமிழ்நாடு போலீஸா?''

''யெஸ்!''

''யூ ஆர் பார்ட்லி லக்கி. ஹாஜியை லொக்கேட் பண்ணிவிட்டோம். கார் பாமிங்கில் அவர் காயப்படவில்லை. அவர் பயணச்சுமையுடன் நின்று வாடகை டாக்ஸி பிடிக்க முயன்ற போது அவருடன் பேசினோம். தீவிரவாதிகள் தாக்குதலைத் தொடர்ந்து இங்கு விமான சேவை ரத்து செய்யப்பட்டிருக்கிறது இன்க்ளுடிங் டொமஸ்டிக் ப்ளைட்ஸ்!''

''இப்போது அவர் எங்கிருக்கிறார்?''

''எங்கள் அருகில்தான் இருக்கிறார்!''

''அவரை என்னுடன் பேசச் சொல்லுங்க... ப்ளீஸ்!''

இரு நிமிட கரைசலுக்குப்பின் ஹாஜி பேசினார்.

''அஸ்ஸலாமு அலைக்கும் பாய்!''

''அலைக்கும் ஸலாம்!''

''நீங்கள் என்னைத்தேடும் விஷயத்தை இவர்கள் விளக்கிக்கூறினர். ஆனால் இதில் மூன்று சிக்கல்கள் முளைத்துள்ளன. இன்னும் மூன்று நாட்களுக்கு உள்ளூர் வெளிநாடு விமான சேவை கிடையாதாம். வைரம் பேங்க் ஆஃப் திருவிதாங்கூரின் பேங்க் லாக்கரில் உள்ளது. நான் வந்தால்தான் லாக்கரை திறக்க அனுமதிப்பார்கள். மூன்று -வைரத்தில் பாதி பங்கை கேட்டு எனது ஒன்றுவிட்ட சகோதரன் வம்பு செய்து வருகிறான். கோர்ட்டிலும் சிவில் வழக்கு ஒன்றும் தொடர்ந்துள்ளான். இந்த நிலையில் நான் ஹைதராபாத் வந்தாலும் வைரத்தை விற்க முடியுமா என்பது சந்தேகமே. தவிர வைரத்தின் மதிப்பு அம்பது கோடியல்ல அறுபத்திரெண்டு கோடி!''

''நீங்கள் போலீஸ் குவார்ட்டஸிலேயே தங்கியிருங்கள். மேல் நடவடிக்கை எடுத்துவிட்டு உங்களைத் தொடர்பு கொள்கிறேன். அல்லாஹ் நம்பக்கம் இருந்தால் எல்லாம் நாம் விரும்பியபடி நடக்கும்!''

தொலைபேசித் தொடர்பு அறுந்தது.

டியாரா பிரசன்னாவை அழைத்தான். ''பிரசன்னா! உங்களுக்கு முதலமைச்சருடன் தனிப்பட்ட பரிச்சயம் உண்டா?''

''உண்டு!''

''நீங்கள் அவருடன் நேரடியா பேசுங்கள். காஷ்மீர்லயிருந்து எதாவது சார்ட்டட் பிளைட் டில்லிக்கு பறக்கக்கூடும். இப்போது சிஎம் எது சொன்னாலும் கவர்மென்ட் கேட்கும்! சிஎம் பிரதமருடன் பேசினால் சார்ட்டட் ப்ளைட் ஹாஜியை ஏற்றிக்கொண்டு ஹைதராபாத் பறந்தாலும் பறக்கக்கூடும்!''

பிரசன்னா தனது காருக்கு ஓடினான். பிரசன்னாவே காரைச் செலுத்தினான் முதலமைச்சர் அலுவலகத்துக்கு பறந்தான்.


முதன்மைச் செயலாளரிடம் தகவலைக்கூற முதலமைச்சர் பிரசன்னாவை உள்ளே அழைத்தார். பிரசன்னா அழுது கொண்டு சொல்வதைப் பொறுமையாக கேட்டுக் கொண்டார்.

''பிரசன்னா! உங்கள் மகனைக்காப்பாற்ற ஒரு தாய் என்ற முறையில் மட்டும்தான் உதவவில்லை. தீவிரவாதிகளை ஆதரிப்பதற்காக வெள்ளைவேழங்கள் கழகத்திற்கு நீங்கள் நிதிஉதவி செய்யாததும் ஒரு காரணம். டோண்ட் ஒர்ரி. அடுத்த ஆறுமணி நேரத்தில் ஹாஜி ஹைதராபாத்தில் இருப்பார். அவரிடம் வைரத்தை விலை பேசுவது உங்கள் பொறுப்பு.

கிட்நாப்பர்ஸ்க்கு பணயத்தொகை தந்து அவர்களை கெடுப்பது எனக்கு உடன்பாடல்ல. இந்த டோட்டல் எபிஸோடில் டிடக்டிவ் டியாரா ராஜ்குமார் இருப்பது ஒரு சந்தோஷமான விஷயம். ஹி வில் ஹாண்டில் தி இஸ்யூ அரிஸ்டோகிரேடிக்கலி அண்ட் ப்யூரோகிரேட்டிக்கலி!''

பிரசன்னா முதலமைச்சர் கால்களில் நெடுஞ்சாண்கிடையாய்





விழுந்தான். ''நன்றி நன்றி நன்றி மேடம்!''

முதலமைச்சர் ஹாட்லைனில் பிரதமர் அலுவலகத்துக்கு பேச-

பிரதமர் அலுவலகத்திலிருந்து சிறப்பு ஆணை காஷ்மீருக்கு பறக்க-

ஹாஜியை அள்ளிக்கொண்டு காஷ்மீர் காவல்துறை விமான நிலையம் ஓட-

தனி விமானத்தில் ஹாஜி ஹைதராபாத் பறந்தார்.

செயற்கைக்கோள் தொலைபேசியில் ஹாஜியைத் தொடர்பு கொண்டான் டியாரா. ''அஸ்ஸலாமு அலைக்கும். நான் டிடக்டிவ் டியாரா. நீங்கள் ஹைதராபாத் விமானநிலையத்தில் இறங்கும்போது உங்களை வரவேற்க எனது உதவியாளினி தேஜிஸ்வினியும் ஸிஜாவும் பணத்துடன் பிரசன்னாவும் காத்திருப்பார்கள். உங்கள் மீது சிவில் வழக்கு போட்டுள்ள உங்களின் ஒன்றுவிட்ட சகோதரரின் பெயர் முகவரி என்ன? கமான் கமான்!''

ஹாஜி சொல்ல சொல்லக் குறித்துக்கொண்டான் டியாரா.

ஒலிவாங்கியை வைக்க, விஸ்வா அழைத்தான் நடிகர் கார்த்திக் குரலில்.

''மேலும் நான்கு மணிநேரம் கரைந்துவிட்டது. என்ன பண்ணிக்கிட்டுருக்க டியாரா!''

''தனி விமானத்தில் ஹாஜி ஹைதாரபாத் வந்துக்கிட்டு இருக்கார்!''

''ஒரு விபரீத கற்பனை டியாரா. ஹாஜி வரும் விமானத்தில் டைம்பாம். டைம் பாம் வெடித்து ஹாஜி விமானத்துடன் தூள் தூள். என்ன பண்ணுவ டியாரா?''

''எனக்கும் ஒரு விபரீத கற்பனை விஸ்வா. போன் பேசிக்கிட்டுருக்ற உனக்கு மாஸிவ் ஹார்ட்அட்டாக் வந்து செத்துப் போகிறாய். தலைவனில்லாமல் உங்க ஆளுக மாலுமி இல்லாத கப்பல் போல தத்தளிக்கிறாங்க. கிடைக்கற அவகாசத்ல உன் இருப்பிடத்தை தாக்கி உன் ஆள்களை அழிச்சு அருணை உயிருடன் மீட்கிறேன். என் பண்ணுவ விஸ்வா என்ன பண்ணுவ விஸ்வா?''

எதிர்முனையில் விஸ்வா தான் பேசிக்கொண்டிருந்த தொலைபேசியை தரையில் அறைந்து நொறுக்கினான்.

## 7

உயர் காவல்துறை அதிகாரிகள் ஆலோசனைக்கூட்டம் ஆரம்பித்தது. காவல்துறைத் தலைவர் அழைக்கப்பட்ட அனைவரும் வந்துவிட்டனரா என்பதனை பார்வையாலேயே ஒரு முறை சரி பார்த்துவிட்டு பேச ஆரம்பித்தார்.

''சென்னையின் சில பிரபல தாதாக்களை நாம் என்கவுன்ட்டரில் கொன்ற போது பொதுமக்கள் ஆசுவாசித்தனர். காவல்துறையின் செயல்பாட்டினை பெருமைப்பட பேசினர். ஆனால் தற்சமய கடத்தல் காவல்துறையின் கண்ணியத்துக்கு ஒரு கரும்புள்ளி. தொழிலதிபர் பிரசன்னாவின் ஒரே மகன் அருண் கடத்தப்பட்டுள்ளான். அதுவும் பட்டப்பகலில் அவன் படிக்கும் பள்ளியிலிருந்து கடத்தப்பட்டு ஹெலியுடன் மாயமாகியுள்ளான். டிடக்டிவ் டியாரா ராஜ்குமார் கிட்நாப்பருடன் நெகோஷியேட் பண்ணிக் கொண்டுள்ளார். அதற்காக நாம் இரு கைகளைக் கட்டிக்கொண்டு நடப்பதை வேடிக்கை பார்க்கக்கூடாது. இக்கடத்தல் விஷயமாக முதலமைச்சர் தெளிவாக ஓர் ஆணை பிறப்பித்துள்ளார். அருண் நமக்கு உயிரோடு வேண்டும். கடத்தல் ஆசாமிகள் பிணமாக வேண்டும். கிட்நாப்பர் கொடுத்துள்ள 36 மணி நேர அவகாசத்தில் ஏற்கனவே பத்துமணி நேரம் கரைந்துவிட்டது. தற்சமயம் நெகோஷியேட்டர் டியாரா என்ன செய்து கொண்டிருக்கிறார்?''

''டியாராவின் அஸிஸ்டென்ட் தேஜி, ஸிஜா, பிரசன்னா, சந்தியா அதிகாரப்பூர்வ வைர மதிப்பீட்டாளருடன் ஹைதராபாத் பறந்துள்ளனர் சார். காஷ்மீரிலிருந்து ஹைதராபாத் வரும் விமானம் வந்து சேருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே இவர்கள் ஹைதராபாத் சேர்ந்து விடுவார்கள்!'' என்றார் தேவா.

''அருணைக்கடத்த உதவிய ஹெலிகாப்டர் யாருக்கு சொந்தமான என்பதனைக்கண்டுபிடித்து விட்டீர்களா?''

''யெஸ் சார். கர்நாடாகவின் ஜெகன் ப்ருவரிஸ்க்கு சொந்தமானது அந்த ஹெலிகாப்டர். கர்நாடதாவுக்குள்ளேயே போய்வர அந்த ஹெலி வாடகைக்கு அமர்த்தப்பட்டு தமிழ்நாட்டு எல்லைக்குள் வந்து கடத்தலுக்கு உதவியிருக்கிறது. ஜெகன் ப்ருவரிஸூக்கும் பிரசன்னகுமார் ப்ருவரிஸூக்கும் இடையே தொழில் போட்டி உண்டு. அதன் தொடர்பாக பகைமையும் உண்டு. ஆனால் ஜெகன் குரூப் ஹெலியை பழிக்கு பழிவாங்க தரவில்லை என்கிறார்கள். அதன் தொடர் விசாரணையை கர்நாடகா காவல்துறை செய்து வருகிறது!''

''அந்த ஹெலிகாப்டர் அருணை கிட்நாப்பர்களுடன் எங்கு இறங்கி சென்றது என்பதை உறுதி செய்து விட்டீர்களா?''

''உறுதி செய்துவிட்டோம். அவர்கள் ஹெலியில் இருந்து இறங்கி காரில் ஏதாவது ஒரு திசையில் ஒரு மணிநேரம் பயணம் செய்திருக்கிறார்கள். ஸோ, அவர்கள் அருணை ஒளித்து வைத்திருக்கும் இடம் - செங்கல்பட்டு அருகாமை. செங்கல்பட்டை நமது மப்டிமம் அலசி சந்தேகத்துக்குரிய நான்கு பங்களாக்களை குறி வைத்து இருக்கிறது!''

''அவை எவை?''

சொன்னார் தேவா.

''நான்கில் இரண்டு இடங்கள் வெள்ளைவேழங்கள் கட்சி முக்கிய பிரமுகருக்கு சொந்தமானவை இல்லையா?''

''அஃப்கோர்ஸ் சார்!''

''கட்சிக்காரர்கள் என்று எவ்வித தயக்கமும் வேண்டாம். ஆளும் கட்சியாக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுங்கள் என பச்சைக்கொடி காட்டிவிட்டார் முதலமைச்சர்!''

''கேட்க சந்தோஷமாயிருக்கு சார்!''

''டியாரா அண்ட்கோ வைரம் விலை பேசி வாங்க போயிருக்கிறது-

வைரம் சில மணி நேரங்களில் கைக்கு வந்துவிடும் என்கிற கனவில் மிதப்பான் கிட்நாப்பர். இந்த சமயத்தை நாம் கேஷ் பண்ணிக்கொள்ளவேண்டும். அதிரடிப்படையுடன் போய் கடத்தல் கும்பலை தொம்சம் பண்ணி அருணை மீட்டுக்கொடுங்கள். ஐ விஷ் கிவ் யூ ஒன்லி த்ரி அவர்ஸ் டைம்!''

''ஓகே சார்!''

''மொதல்லயே கேட்கனும்னு நினைச்சேன். கடத்தல் கும்பல் யாரென்பதை உறுதிசெய்து விட்டீர்களா?''

''புரபஷனல் கிட்நாப்பர்ஸ் குருப் மொத்தம் ஆறு தற்சமயம் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. செயின்ட்மேரிஸ் கான்வென்ட்டில் அருணை கடத்திச்சென்ற கும்பலை போலீஸ் யூனிபார்முடன் பள்ளி தலைமையாசிரியையும் மற்ற ஆசிரியைகளும் பார்த்துள்ளனர். அவர்களை விசாரித்த போது அருணை கடத்திச்சென்றது - கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படிச்ச டிவி விளம்பரங்களில் ஜிங்கிள்ஸ் பாடிய மும்பையில் பிறந்து வளர்ந்த கோபதிதன்ராஜ்தான் அருணின் கிட்நாப்பர். கோபதிக்கு பதினான்கு மொழிகள் தெரியும். அவனுக்கு அதிகாரப்பூர்வ மனைவிகள் இருந்தாலும் கணக்கு வழக்கில்லாத காதலிகள் உள்ளனர். நிஜநாடகங்களில் நடிச்ச அனுபவமும் அவனுக்கு உண்டு. மும்பை போலீஸ் அவனை கடந்த நான்கு வருடங்களாக தேடி வருகிறது. அவனை பற்றிய கூடுதல் விவரங்களை மும்பை போலீஸிடம் கேட்டுப் பெற்றிருக்கிறோம். கோபதி ஒரு ஈவு இரக்கமில்லாதவன். இதுவரை அறுபதுக்கும் மேற்பட்ட கடத்தல்கள் செய்திருக்கிறான். ஐம்பதுக்கும் மேற்பட்ட தடவைகள் கேட்ட பணயத்தொகைகளை பெற்றிருக்கிறான். எட்டுத்தடவை போலீஸுடன் மோதி கடத்திச்சென்றவர்களை வன்கொலை செய்திருக்கிறான். இரண்டே இரண்டு முறை கடத்தப்பட்டவர்களை காவல்துறை மீட்டிருக்கிறது. அரபுநாடுகளில் நடமாடும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டவன். இவனின் இயங்கும்முறை அசாத்தியமானது!''

''அவனது புராணம் போதும் தேவா. இந்த கிரிமினல் பூனைக்கு மும்பை போலீஸால் மணிகட்ட முடியவில்லை; நாமாவது கட்டி விட வேண்டும். கோபதி தமிழ்நாட்டுக்கு வந்து வாலாட்டி ஒழிந்தான் என்கிற சரித்திரத்தை நாம் உருவாக்கவேண்டும்!''

''ஓகே சார்!''

''நோ மோர் டைம் டு டிஸ்கஸ். தேவைப்படும் அதிரடிப்படை வீரர்களுடன் கோபதியின் மறைவிடத்தைத் தாக்குங்கள்!''

தேவா விரைப்பாய் சல்யூட் அடித்தார்.

''தாக்குதலுக்கான திட்டத்தை கூட்டிச்செல்லும் அதிரடிப்படை வீரர்களுடன் விவாதியுங்கள். இந்த ஆபரேஷனுக்கு பெயர்-'ஆபரேஷன் தண்டர்போல்ட்' - ஆபரேஷன் வெற்றி பெற வாழ்த்துகிறேன். ஆலோசனைக்கூட்டம் இத்துடன் கலையலாம்!''

தேவா யோசனையுடன் வெளியே வந்தார். இருபது அதிரடிப்படை வீரர்களின் பட்டியலை முருகையா கையளித்தார்.



அதனை முருகையாவுடன் விவாதித்து ஓகே செய்தார். இருபது வீரர்களுடன் வட்டம் அமைத்துக் கொண்டு பேசினார்.

சிறப்பு வாகனம் 'வஜ்ரா' காத்திருந்தது. இருபது வீரர்களுடன் தேவைப்படும் ஆயுதங்களுடன் ஏறிக்கொண்டார்.

சிறப்பு வாகனத்திற்கு முன் தேவாவின் கார் விரைந்தது.

வீரர்கள் முகத்திற்கு மை பூசிக் கொண்டனர். மார்பு காக்க விசேஷ கவசம் மாட்டிக்கொண்டனர்.

சில வீரர்கள் சுவர்களை ஊடுருவி பார்க்கும் கண்ணாடி அணிந்து கொண்டனர். கையில் இன்ப்ரா ரெட் ஹோமிங் டிவைஸ் உள்ள அதிநவீனத்துப்பாக்கிகள். சிலர் உடல் வெப்பத்தை வைத்து மனிதரை லொகேட் பண்ணும் கண்ணாடி அணிந்து :க்கட் லாஞ்சர் சுமந்தனர்.

வாகனத்தின் திசை காட்டும் கருவி இயங்கியது.

தேவா சந்தேகப்பட்டு குறித்திருந்த பங்களாவை மேப்பின் சிவப்பு வெளிச்சம் பீப்பீப் என்றது.

குறிப்பிட்ட அந்த பங்களாவைச் சுற்றி ராட்சச வட்ட வெளிச்சங்கள் எழுந்தன.

தேவா மெஹாபோனில் கூவினார்.

''மிஸ்டர் கோபதி! உன்னையையும் உன்னுடைய ஆட்களையும் எங்களது அதிரடிப்படை வட்டமிட்டுள்ளது. நீ சரணடைய சில நிமிடங்கள் அவகாசம் தருகிறேன். அதற்குள் சரணடைந்து விடு. இல்லையென்றால் நீயும் உனது ஆட்களும் பிணமாக்கப்படுவீர்கள்!''

மிஸ்டர் எக்ஸ் எனப்பட்ட விஸ்வா எனப்பட்ட கோபதி பற்களை நரநவெனக்கடித்தான்.

''என்னடாது? தமிழ்நாடு போலீஸ் டபுள் கேம் ஆடுது? டியாரா புத்திய காண்பிச்சிட்டான். தமிழ்நாடு போலீஸ்கிட்ட நாம யாருன்னு காட்டுங்கடா!''

10...0...8...7...6...5...4...3...2...1...0!

அதிரடிப்படை கண்ணீர் புகைக்குண்டுகளை பங்களாவுக்குள் வீசியது. சுவர்களை ஊடுருவி பார்த்து நகரும் உருவம் கணித்து ராக்கட் லாஞ்சர் இயக்கினர்.

ட்டளாஸ்!

பாங்!

பூம்!

சக்கடக்கடசக்கட சக்கசக்கசக்கும் சக்கும்.

ப்யூங் ப்யூங் ப்யூங் ப்யூங் ப்யூங் ப்யூங்.

தடதட!

''ஆ!''

''ஸேசுவே!''

''ஐயோ!''

தரையில் பதித்திருந்த சில கண்ணிவெடிகளை ரிமோட்டால் இயக்கினான் கோபதி.

போலீஸ் வாகனம் இருபனைமர உயரத்துக்கு வெடித்துச் சிதறியது.

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

ஷிக்கும்!

கந்தகப்புகையும் RDX நாற்றமும் சுழன்றடித்தன.

இரண்டு மணி நேர துப்பாக்கிச் சண்டைக்குப்பின் அப்பிராந்தியம் மௌனம் காத்தது.

இருகைகளிலும் துப்பாக்கி ஏந்தியபடி பங்களாவுக்குள் பதுங்கி பதுங்கிப் போனார் தேவா.

வழியெங்கும் அதிரடிப்படை வீரர்களின் இரத்தம் தோய்ந்த பிரேதங்களும் கோபதியின் சகாக்களின் பிரேதங்களும்!

ஒவ்வொரு அறையாய் போனார்!

எந்த அறையிலும் யாரும் இல்லை!

ஒரு அறைக்குள் கால் வைத்ததும் ஒரு மைக்ரோரிக்கார்டர் இயங்கியது. "நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டீங்களே தமிழ்நாட்டு போலீஸ்களா! எனக்கு சில சகாக்கள் நஷ்டம் ஆனாலும் அருணுடன் தப்பிவிட்டேன். உங்களது ஆபரேசனுக்கு பரிசு மைக்ரோ ரிக்கார்டர் அருகில்!"

"ஒரு கிப்ட்பேக் இருந்தது. பிரித்தார்.

அதில்–

வைரமோதிரம் அணிந்த அருணின் மோதிரவிரல் இரத்தம் சொட்டச்சொட்ட! ரிக்கார்டர் குரல் பிசாசுத்தனமாய் கெக்கலித்துக் கொண்டே இருந்தது!

## 8

இஸ்லாமிய கட்டடக்கலை கலாச்சாரத்தை பூசிக்கொண்டு முஸ்லிம் திருமணப்பெண் போல் மினுமினுக்கும் வர்ண அலங்காரத்துடன் தேஜி அண்ட்கோவை வரவேற்றது ஹைதராபாத். சென்னையிலிருந்து வடமேற்காய் 500 கிமீ தூரத்தில் எழுப்பியிருந்தது. அழகிய புராதன ஹைதராபாத்.

ஐந்து நட்சத்திரஹோட்டலில் நான்கு சூட்கள் ரிசர்வ் செய்யப்பட்டன. ஒரு சூட்டில் பிரசன்னாவும் சந்தியாவும் தங்கி குளித்து உஸ்மான் அலி பாதுஷாவை எதிர்கொள்ள ஆயத்தமாயினர்.

உலாதொலைபேசியின் பொத்தான்களை அழுக்கி, "ஹலோ டியாரா!" என்றான் பிரசன்னா.

"ஹலோ பிரசன்னா!"

"அங்கு ஏதாவது முன்னேற்றம் பின்னேற்றம் அரங்கேறியுள்ளதா?"

"தயங்கினான் டியாரா. "ஆ... ஆம்!"

"தயங்காம சொல்லுங்க. என்ன நடந்தது?"

"நேற்றிரவு கிட்நாப்பரின் மறைவிடத்தை மோப்பம் புடிச்சு போலீஸ் அதிரடிப்படைத் தாக்குதல் நிகழ்த்தியது மிஸ்டர் பிரசன்னா. தாக்குதலில் அதிரடிப்படை வீரர்கள் இருபது பேர் மரணம் கிட்நாப்பரின் சகாக்கள் பனிரெண்டு பேர் சாவு. ஆனால் கிட்நாப்பர் உங்க பய்யன் அருணுடன் தப்பிச்சிட்டான். கிட்நாப்பரின் மறைவிடத்தை அட்டாக்குக்கு பின் தேவா அலசியபோது– டென்ஷன் ஆய்டாதிங்க– வைரமோதிரத்துடன ஒரு சிறுவனின் விரல் கிடைச்சது!"

"கடவுளே!" நெற்றியில் அறைந்து கொண்டான் பிரசன்னா. "யாரைக்கேட்டுக்கிட்டு போலீஸ் இந்த அட்டாக்கை நடத்னது?"

"மொதல்லயே சொன்னேன் டென்ஷன் ஆகாதிங்கன்னு. விரலை டிஎன்ஏ டெஸ்ட்டுக்கு அனுப்பியுள்ளேன். டெஸ்ட் ரிசல்ட் வரதுக்கு முன்னமே சொல்றேன். கிடைச்ச விரல் உங்க பய்யன் விரல் இல்ல. இல்லன்றதுக்கு ரெண்டு காரணம். ஒன்று– எந்த கிட்நாப்பரும் மிகப்பெரிய தொகை கைக்கு வர அம்பதுக்கு அம்பது பர்சன்ட் சான்ஸ் இருக்கும்போது அவசரப்பட்டு கடத்திச்சென்றவருக்கு சிறு ஊறும் விளைவிக்கமாட்டான். அவன் கேக்ற அம்பது கோடியை அவனைக்கொஞ்சி முத்தமிட்டா போலீஸ் தர அனுமதிக்கும்? நேத்தைய போலீஸின் அதிரடித்தாக்குதல் – இட்ஸ் பார்ட் ஆஃப் கேம். ரெண்டாவது– உங்கள் பய்யனின் புகைப்படங்களை வைத்து கவனமாய் ஆராய்ந்தேன். நமக்குக்கிடைச்ச விரலில் ஒரு முரட்டு தழும்பு இருக்கிறது. விரலின் நிறமும் தடிமனும் கூட உங்கபய்யனின் விரலிலிருந்து மாறுபடுகிறது. தவிர யாரோ ஒரு சிறுவனுக்கு லோக்கல் அனஸ்தீஸியா குடுத்து விரலை வலிக்காமல் கனகச்சிதமாய் வெட்டியுள்ளனர். இட்ஸ் எ பார்ட் ஆஃப் தெயர் கேம்!"

"யூகங்களை அனுமானங்களை நான் முழுக்க நம்புவதில்லை. கிட்நாப்பருடன் பேசுனீர்களா இது பற்றி?"

"பேசினேன். இதோ நான் பேசியதின் ஆடியோ பதிவு!"

ஆன் பண்ணி உலாதொலைபேசியின் மீது ஒற்றினான்.

தேசியகீதம் இசை ஒலித்தது.

தொடர்ந்து–

"ஹலோ டியாராவா?"

"ஆமா கோபதி நான்தான்!"

"டேய் மு.கூ.மு.பு., ந.து., என்கிட்ட பேரம் பேசிகிட்டே போலீஸை அனுப்பி என்னை பிடிக்க முயற்சி பண்ணிருக்கியே? அப்றம் என்ன மயிருக்கு உன் எழுத்து மீது சத்தியம் பண்ணின? ப்யூச்சர்ல கோஸ்ட் ரைட்டர்ஸ் வச்சு கதை எழுதிக்கலாம்னு முடிவு பண்ணிட்டியா?"

"போலீஸ் தன்னிச்சையாக நடந்து கொண்டுள்ளது. அதிரடிப்படைத்தாக்குதல் நடந்து முடிந்துபிறகுதான் எனக்கு தெரியும்!"

"போலீஸின் முந்திக்கொட்டைத்தனத்துக்கு பரிசா அருணின் விரலை கட் பண்ணி அனுப்ச்சிருக்கேன் பாத்தியா?"

"விரல் அருணுடையது அல்ல!" அனுமானத்தைக்கூறினான்.

"பிராமணன்களுக்குத்தான் இவ்வளவு அறிவு இருக்கும்? உனக்கெப்டிடா? கலப்பா நீ?"

"சிரித்தான் டியாரா. "ஆபாசமா பேசற. கழுதைக்கும் நரிக்கும் கலப்பாய் பிறந்த மனுசப் பயலா நீ?"

"நீ பேசறது கூட வக்கிரம்தான். உன் அனுமானம் சரிதான்டா. அருணை இன்னும் ஒன்னும் பண்ணல. மீண்டும் ஒரு வாய்ப்பு உனக்கு குடுத்திருக்கேன். வைரத்தை வாங்கிட்டு வந்து குடுத்துட்டு பய்யனை கூட்டிட்டுப்போ டியாரா. ஹைதராபாத் போனவர்கள் எத்ன மணிக்கு சென்னைக்கு திரும்புவார்கள்?"

"இன்னும் ஒரு ஆறுமணி நேரம் பொறு - வைரத்தை எங்கே வைத்து வாங்கி அருணை திரும்பியளிப்பாய்?"

"அதை வைரம் வந்ததும் தீர்மானிப்போம்!"

ரிக்கார்டரை ஆஃப் பண்ணிவிட்டு பேசினான் டியாரா. "ஒகே. வைரத்தை விலைபேசி முடித்துவிட்டு மீண்டும் என்னை தொடர்பு கொள்ளுங்க!"

இருமுனை தொடர்பு அறுந்ததும் பிரசன்னாவை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டாள் சந்தியா. "என் பய்யனுக்கு என்னாச்சு? கிட்நாப்பர் அருணை எதாச்சும் பண்ணிட்டானா?"

முதலில் தயங்கிய பிரசன்னா உரையாடலை முழுக்க விவரித்தான். கதறியழ ஆரம்பித்தாள் சந்தியா. "அருண்! அருண்! அருண்! அருண்! அருண்! அருண்!"

அருணின் புகைப்படத்தை முத்தமிட்டு முத்தமிட்டு அழுதாள்.

"இந்த கடத்தல்ல போலீஸையும் டிடக்டிவ் டியாரா ராஜ்குமாரையும் மூக்கை நுழைக்க அனுமதிச்சது நீங்க பண்ணின பெரிய தப்பு. இனியாவது எந்த குளறுபடி இல்லாம வைரத்தை குடுத்து அருணை மீட்கப் பாருங்க!" கத்தினாள். "எல்லாம் உங்களாலதான். பணம் சம்பாதிக்க எக்கச்சக்க எதிரிகளை உருவாக்கிட்டீங்க. இந்தத்தடவை நாம அருணை காப்பாத்திட்டாலும் எதிர்காலத்ல மீண்டும் கிட்நாப்பிங் நடக்காது என்பதுக்கு என்ன உத்திரவாதம்?"

"இது மாதிரி பேசி என் மனசை மேலும் புண்படுத்தாதே. பணமும் வேண்டும் புகழும் வேண்டும் சமூகத்ல அந்தஸ்தும் வேண்டும்னு ஆசைப்பட்டா எதிரிகள் கட்டாய இலவசம். எதிர்காலத்ல மீண்டும் அருணை யாரும் கடத்துவாங்களா, கடத்தமாட்டாங்களான்றதும் நம்ம படைச்ச கடவுளுக்குத்தான் தெரியும். நாம எப்பவும் வாழ்க்கையின் பாஸிடிவ் ஸைடத்தான் பாக்கனும்!"

வாசலின் அழைப்புமணி சிணுங்கியது.

பிரசன்னா போய் கதவைத்திறந்துவிட்டான். தேஜிஸிஜா இரு முஸ்லிம் முதியவர்களுடன் நின்றிருந்தனர். நால்வருடன் ஒரு அட்வகேட்டும் சென்னையிலிருந்து கூட்டிச்செல்லப்பட்ட வைர மதிப்பீட்டாளரும் கூட நின்றனர்.

"மிஸ்டர் பிரசன்னா! இவர்தான் ஹாஜி உஸ்மான் அலி பாதுஷா. அவரின் வைரம்தான் நீங்க வாங்கப்போறீங்க. இவர் மொகமத் மொயினுதீன். பாதுஷாவின் சகோதரர்!"

"வாருங்கள் வாருங்கள் பாய்!"

உள்ளே வந்தமர்ந்தனர். அனைவருக்கும் சுடச்சுடச் தேநீர் தருவிக்கப்பட்டது.



அடுத்த சிமிழ்

ஆர்.சீதாராணி எழுதிய

# சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே...

## குதூகலமூட்டும் குடும்ப நாவல்

"பாதுஷா பேங்க் ஆஃப திருவிதாங்கூரின் சேப்டி லாக்கரில்தான் வைரத்தை வைத்துள்ளார். வங்கியின் வேலை நேரம் முடிந்துவிட்டது. உள்ளூர் காவல்துறையை அணுகியுள்ளோம். அவர்கள் வங்கி மேனேஜரை தொடர்பு கொள்ள போயிருக்கிறார்கள்!"

உலாதொலைபேசி அழைத்தது.

"ஹலோ ஹைதராபாத் அஸிஸ்டென்ட் கமிஷனர் பேசுகிறேன்!"

"நான் டிடக்டிவ் தேஜிஸ்வினி!"

"வங்கி மேனேஜர் ஏதோ ஒரு பாருக்கு குடிக்கபோயிருக்கிறார். அவரை வலை வீசித்தேடிக் கொண்டு இருக்கிறோம். மேனேஜர் கிடைச்சவுடன் மீண்டும் பேசுகிறேன்!"

பத்து நிமிடங்கள் கரைந்தபின்-

"மேனேஜர் கிடைச்சிட்டார். சுயநினைவில்லாத போதையில் இருக்கார். போதை தெளிய வைத்துக்கொண்டு இருக்கிறோம். லாக்கரை திறக்க வரமாட்டேன் என்கிறார். அவரை பணிய வைக்க பல யுக்திகள் மேற்கொண்டிருக்கிறோம்!"

"உஸ்மான அலி பாதுஷா பாய்யை அழைச்சுக்கிட்டு ஸிஜா பாங்குக்குவருவாள். வைரத்தை உங்க பாதுகாப்போட இங்கே கொண்டு வந்திருங்க!"

"செஞ்சிடுறேன்!"

பாதுஷாவும் ஸிஜாவும் புறப்பட்டு போயினர். அவர்கள் போனதும் மொகமத்மொயினுதீன் பேச ஆரம்பித்தார்.

"வைரத்தை விற்க நான் உடன்படமாட்டேன். வைரம் யாருக்கு சொந்தம்னு கோர்ட் தீர்மானிக்கட்டும்!"

தனக்கு சாதகமான டாக்குமென்ட்களை தேஜியிடம் கையளித்தார். தேஜி படித்துவிட்டு அட்வகேட்டிடம் தந்தான்.

"இந்த கேஸ் பற்றின முழுவிவரங்களும் எனக்கும் தெரியும் மேடம்!"

''நீங்கள் இவரின் கேஸுக்கு நீதிபதியாக இருந்து உடனடியாக தீர்ப்பு தருவதென்றால் என்ன தீர்ப்பு தருவீர்கள்?''

அட்வகேட் தொண்டையைச் செருமிக் கொண்டார். ''ஹாஜி உஸ்மான் அலி பாதுஷாவுக்கு எண்பது சதவீதத்தொகை. மொகமத் மொயினுதீன் பாய்க்கு இருபது சதவீதத்தொகை!''

மொயினுதீன், ''அட்வகேட், ஹாஜிக்கு ஆதரவாகப் பேசுகிறார். ஹாஜியிடம் கையூட்டு வாங்கிவிட்டாரோ என்னவோ? எனக்கு அம்பது சதவீதத்தொகை வேணும்!''

தேஜிஸ்வினி ரிவால்வரை எடுத்து மொயினுதீன் முன் நீட்டி ரிவால்வரின் உலோகவாயைத்தடவிக் கொடுத்தாள். ''இந்த வைரம்தான் ஒரு சிறுவனின் உயிரைக்காப்பாற்றப்போகிறது. வைர வியாபாரத்துக்கு எந்த இடைஞ்சல் வந்தாலும் சகிக்கமாட்டேன். மிஸ்டர் மொகமத் மொயினுதீன் இந்த அவுட் ஆஃப் கோர்ட் செட்டில் மென்ட்டுக்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் உங்களை இந்த அறைக்குள்ளேயே சுட்டுக் கொல்லத்தயங்க மாட்டேன்!''

''அரே அல்லாஹ்! விருந்தாளியாக கூப்பிட்டு அவமானப்படுத்த பார்க்கிறீர்களா?''

சரேலென்று பாய்ந்தாள் தேஜி. துப்பாக்கியை எடுத்து அவரின் மூக்கில் பொருத்தினாள்.

''பின்ன என்ன பாய்? சிவில் கேஸ் முடிய இன்னும் இருபது முப்பது வருஷமாகும். தீர்ப்பைக் கேட்க நீங்களும் இருக்கமாட்டீங்க ஹாஜியும் இருக்கமாட்டார். யாரும் அண்ணன் தம்பி தகராறுகளை கோர்ட்டுக்கு கொண்டு போகாதிங்கய்யா. கேஸால இருதரப்பு வக்கீல்கள் பாக்கட் நிரம்பும். இருதரப்பு சொந்தபந்தங்களுக்கிடையே விரோதம் குரோதம் விஸ்வரூபிக்கும். நெட்ரிசல்ட் மனக்கசப்பும் இரத்தக்களறியும்தான். என் பேச்சு வெறும் மிரட்டல் அல்ல. நிஜமாகவே உங்களை சுட்ருவேன். ஐ எம் மோர் டெஸ்பரேட் இன் திஸ் கேஸ். எனக்கு அந்த சிறுவன் காப்பாற்றப்பட வேண்டும்!''

''என்னை சுட்டுட்டு நீ உயிரோட மதராஸ் போய்டுவியா!''

''நீ போறேன் போகாம இருக்கேன். இஸ் டஸ்ண்ட் மேட்டர்... நீங்க மௌத் ஆய்டு வீங்கல்ல. அதுபோதும் எனக்கு!''

வைரத்துடன் உஸ்மான் அலிபாதுஷா பிரவேசிக்க மொகமத் மொயினுதீன் சப்தமாக அறிவித்தார். ''அல்லாஹ்வுக்காக இந்த செட்டில் மென்ட்டுக்கு ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் பேசின தொகையை குடுங்க ஹாஜி சம்மதிப்பாரா?''

நடந்ததை தேஜி விவரிக்க புன்னகை பூத்தார் ஹாஜி. ''நானும் அல்லாஹ்வுக்காக சம்மதிக்கிறேன்!''

வைரமதிப்பிட்டாளர் வைரத்தை சோதித்துவிட்டு, ''வைரம் குறைந்தபட்சம் அம்பது கோடி பெறுமானமுள்ளதே!'' என அறிவித்தார்.

பிரசன்னாவின் ஷேர்களை வாங்கிக்கொண்டு ஷேர்புரோக்கர் பணம் தர பணம் இரு சகோதரர்களுக்கும் பிரித்துத்தரப்பட்டது.

வைரம் பிரசன்னாவிடம் கையில் மின்னியது.



## 9

டியாரா ராஜ்குமார் கோபதியின் தொலைபேசி அழைப்புக்காக காத்திருந்தான்.

தொலைபேசி அழைத்தது.

''எப்டிடாயிருக்க இடைத்தரகா?''

''சேமமாயிருக்கேன் கடத்தல்காரனே!''

''ஹைதராபாத் போன எல்லோரும் சென்னை திரும்பிவிட்டாங்க போல. இவ்ளவு எளிதாக வைரத்தை விலை பேசிவாங்கி வருவீங்கன்னு நான் கனவிலையும் நினைக்கலடா. உன் உதவியாளினிகள் செமத்தியான பிகர்கள் மட்டுமல்ல செமத்தியான கெட்டிக்காரிகடா.''

''நாம தொடர்ந்து பேசறதுக்கு முன்னாடி நான் அருண் முழு உடல்நலத்துடன் இருக்றதை பாக்கணும்!''

''என்ன இப்டி சந்தேகப்படுற? டாக்டர் நர்ஸ் டயட்டீஷியன் எல்லாம் வச்சு அவனை ராஜமரியாதையா பரமரிக்கிறேன்டா டியாரா. அம்பது ரூபா கறிக்கோழியையே விழுந்து விழுந்து இரை போட்டு கவனிக்கிறவன் நான். அம்பது கோடி வைரம் ஈட்டித்தருகிற பொடியனை கவனிக்காம இருப்பேனா?''

''நோ நோ. இப்ப நான் அவனை பார்க்கணும் பேசணும்!''

''விடியோ மெயில் அனுப்பவா?''

''விடியோ போன் மூலம் பேசச்சொல்லு அவனை!''

கோபதி சிரித்தான். ''விடியோபோன்ல கூட நான் நினைச்சா விஞ்ஞான சாகசம் நிகழ்த்தி எக்ஸ் ஆர் ஒய்யை அருணாக்காட்டமுடியும்! ஒகே. சில நொடிகள் காத்திரு!''

தொடர்பு அறுந்தது. விடியோபோனுடன் காத்திருந்தான் டியாரா. உயிர்த்தது. சிறுரோமங்கள் முளைத்த மொட்டைத்தலையுடன் அருண் தோன்றினான்.

''ஹலோ அருண்! உன்னை மீட்டு உன் அம்மாவிடம் சேர்க்கிற டிடக்டிவ் அங்கிள் பேசுறேன் எப்படி இருக்க?''

''நல்லாதான் இருக்கேன் அங்கிள். ஆனா ரொம்ப லோன்லியா இருக்கேன். பகலா இரவா தெரியாம நேரமில்லாத நேரத்தில் சோர்ந்து கிடக்றேன் அங்கிள்!''

''உன்னை அடிச்சு கிடிச்சு துன்புறுத்றாங்களா?''

''இல்லை அங்கிள்!''

''சாப்பாடு?''

''கலோரி ஃபேட் புரோட்டின் ரெஸ்ட்ரிக்ட்டட் டயட்தான் அங்கிள். அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன்!''

விடியோபோனை வாங்கி கதறிழுதாள் சந்தியா. ''அருண்!''

''ம்மா... எப்டிம்மா இருக்க?''

''நீ இல்லாம நான் பாதி செத்துப்போய் கிடக்கேன். கடந்த 32 மணி நேரத்ல நான் பச்சைத்தண்ணி தவிர வேறெதுவுமே எடுத்துக்கலடா.

எனக்கு பயமாயிருக்கு. வைரத்தை வாங்கிட்டு உன்னை பத்திரமா என்கிட்ட குடுத்ருவாங்களா?''

''சாப்பிடாம இருக்காதம்மா. உனக்கு ஒண்ணுன்னா எனக்கு தாங்கிக்கமுடியாதும்மா. வைரத்தை எவ்வளவு ரூபாய்க்கும்மா வாங்னிங்கம்மா? அப்டி வாங்கி என்னைக் காப்பாத்தனுமா?''

''அந்தக்கணக்கெல்லாம் உனக்கெதுக்கு? உனக்காக அப்பா ஒட்டு மொத்த சொத்தையும் கூட வித்து கிட்நாப்பர் காலடில சமர்ப்பிப்பார்!''

''அப்பா கிட்டக் குடும்மா!''

ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரன் தன்னுடைய மகளின் பிரிவுக்காக கதறியழுவதை கண்கலங்குவதைப் பார்த்தான் டியாரா. தன்னுடைய மகனுக்கு இப்படி ஒரு கடத்தல் ஆபத்து நேர்ந்தால் தான் இதைவிட அதிகமாய் அழுவோமோ? என யோசித்தான்.

விடியோ போனில் தெரியும் மகளின் உருவத்தை முத்தமிட்டான் பிரசன்னா.

''ஒன்றரை நாள்ல இப்டி மெலிஞ்சு போய்ட்டியேப்பா!''

''ஏன்ப்பா மிகைப்படுத்தி பேசறீங்க. இங்க வெயிட் போட்டு பாத்தாங்க. வெறும் ஒன்றரை கிலோதான் குறைஞ்சிருக்கேன். வீடு வந்து சேர்ந்ததும் நார்மலாகி விடுவேன். என் பள்ளிமாணவர்கள் போன்ல என்னை விசாரிச்சாங்களா டாடி?''

''என்ன அப்டி கேட்டுட்ட? நம்ம உதவியாளன் போன்நோட் போட்டு வந்த கால்களை குறிச்சு வச்சிருக்கான். மொத்தம் இந்த 32 மணி நேரத்ல 1248 பேர் நாலு லைன்ல உன் நலம் விசாரிச்சிருக்காங்க. பங்களா முழுக்க உன் நலம் வேண்டும் ஆயிரக்கணக்கான ஆர்ச்சீஸ் கார்டுகள். பங்களா முழுக்க முழுக்க விபூதி பொட்டலங்களும் பிரசாதங்களும் குவிந்து கிடக்கின்றன. உன் பள்ளி தலைமையாசிரியை குற்ற உணர்சியால் வேலையை ராஜினாமா பண்ணிவிட்டு அழுதபடி தேவாலயத்தில் குடியிருக்கிறார்.''

சட்டென்று விடியோபோனை பிடுங்கிக்கொண்டான் கோபதி. முகத்தில் முகமூடி அணிந்திருந்தான். ''நல்ல தாய்பாசம்... நல்ல தந்தை பாசம்... போங்கடா போங்கடா டேய்... இந்தியர்கள் எதனால வீணாப்போறாங்கன்னா இந்த பாச சென்டிமென்ட்டாலதான். பொம்பளைக்கு செக்ஸ் தேவை. ஆம்பிளைக்கு செக்ஸ்தேவை. ஆம்பிளையும் பொம்பளையும் தங்களின் செக்ஸ் ஆசைகளை நிறைவேத்திக்கிறாங்க. கடவுள் 'குழந்தை'ன்ற அபராதம் போடுறான். அபராதத்தை போடுறான். அபராதத்தை எல்ஐஸி பிரிமியம் மாதிரி தவணை முறை கட்றாங்கப்பா பெற்றோர். எனக்கு ரெண்டு குழந்தைகள் பிறந்துச்சு. அதுக பேரென்ன அதுக இப்ப என்ன பண்ணுதுகன்னு கூட எனக்குத்தெரியாது!''

விடியோபோனை கட்செய்து உலாதொலைபேசிக்கு வந்தான் கோபதி.

''கோபதி! வைரத்தை எங்க வாங்கிக்கிட்டு அருணை விடுவிக்ற?''

''என்னை கோபதி கோபதின்னு எனக்கு பெயர் வைச்சவன் மாதிரி கூப்பிடுற. என் பேரு கோபதி கிடையாது. போலீஸ் சொன்னதை நம்பிக்கிட்டு என்னை கோபதின்னு கூப்பிடுற. சரி, கூப்ட்டுக்க. எனக்கென்ன நஷ்டம்? சென்னை டு பாண்டிச்சேரி கடற்கரைசாலையின்



டோல்கேட்டுக்கு வைரத்துடன் வந்திரு டியாரா. உன் கூட யாரும் வரக்கூடாது! இன்னும் சரியாக அறுபது நிமிஷத்தில அங்கிரு. என் சார்பாக ஒரு வைர மதிப்பீட்டாளர் உன் வைரத்தை ஒரிஜினல்தானான்னு செக் பண்ணுவார். அவர் ஓகே பண்ணி வைரத்தை வாங்கிக்கொண்டு எனது காருக்கு நடந்து வருவார். வைரம் என் கைக்கு வந்ததும் காரிலிருக்கும் அருணை விடுவிப்பேன். நீ கூட்டிச்செல்லலாம்!''

''ரைட்டோ!''

''போலீஸ் தனியா எதாவது திட்டம் போட்டு என் மீது தாக்குதல் நடத்தாம பாத்துக்க டியாரா. ஏதாவது ஏடாகூடம்னா அருண் முழுசா கிடைக்கமாட்டான்!''

''காவல்துறையுடன் நானும் பிரசன்னாவும் பேசிவிட்டோம். போலீஸ் உனக்குத் தொந்திரவு தராது!''

''ஏதாவது தொந்திரவு தந்து எனக்கு ஏதாவது ஆனா என் துபாய் நண்பன் சென்னையின் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் குண்டு வைத்து நூற்றுக்கணக்கானோரின் உயிர் குடிப்பான். அம்பது கோடிக்கு குறைஞ்சபட்சம் அய்நூறு துர்மரணங்கள் கேரன்டி!''

''தேவையில்லாம அதெல்லாம் ஏன் பேசுற?''

''முன்னெச்சரிக்கை விடுப்பது சாலச்சிறந்தது டியாரா!''

''வேற எதாவது அறிவுரை பாக்கியிருக்கா?''

''SAFE PASSAGE - பற்றி கேள்விப்பட்டிருப்பாய். அப்படி ஒரு ஸேப் பேஸேஜை நீ வகுத்துத்தரவேண்டும். அத்துடன் இந்தியக்கடல் எல்லைக்கு அப்பால் நிற்கும் ஒரு பாகிஸ்தானிய கப்பலில் ஒரு ஹெலிகாப்டர் வைத்து இறக்கிவிடவேண்டும்!''

''ஹெலிகாப்டரை நாம் பண்டமாற்றம் செய்து கொள்ளும் டோல்கேட்டின் அருகே நிறுத்திவைக்கச் சொல்கிறேன். அத்துடன் பாண்டி-சென்னை கடற்கரைசாலை போக்குவரத்தை இப்போதிருந்து ஒரு ஆறுமணி நேரத்துக்கு நிறுத்தி வைக்கச் சொல்கிறேன். ஹெலிகாப்டர் உன்னைச்சுமந்து சென்று பாகிஸ்தானிய கப்பலில் இறக்கிவிடும் வரை இந்தியக்கடலோரப்படை தடுக்காது!''

''உன்னுடைய வாக்குறுதிகள் அதிகாரப்பூர்வமானவை என்று நான் எப்டி நம்புவது?''

''இன்னும் 15 நிமிடங்களில் பொதிகை டிவியில் தமிழக முதலமைச்சர் தோன்றி நான் அளித்த வாக்குறுதிகளை எண்டார்ஸ் பண்ணுவார்!''

''வீரப்பன் விஷயத்ல அரசு பல்டியடிச்ச மாதிரி இந்த தடவையும் அடிச்சிராதே?''

''வீரப்பன் விஷயத்தை உன் விஷயத்துடன் ஒப்பிடாத. வைரத்துடன் உன்னை பாகிஸ்தானிய கப்பலின் விட்ட அரைமணிநேரம் கழித்து நாங்கள் எந்த செயலிலும் ஈடுபடுவோம். அப்போது நம்மை வாக்குறுதிகள் கட்டுப்படுத்தாது!''

''சர்வதேச கடல் எல்லையில் இந்தியக்கப்பற்படை வாலாட்ட முடியாது. வாலாட்டினால் இன்னொரு பாக்-இந்தியா போர் மூளும்!''

''மூண்டாலும் இம்முறையும் எங்கள் இந்தியாவே வெற்றிவாகைசூடும் கோபதி!''

சிரித்தான் கோபதி. ''தேசபக்தி இருக்கவேண்டியதுதான். ஆனா எதிராளியின் நடப்புலம் தெரியாம வெற்றிதோல்விய அட்வான்ஸா

கணிக்கக்கூடாது!'' ''உன்னை இந்தியன் என்று சொல்லிக் கொள்ளவே வெக்கப்படுகிறேன் கோபதி.''

''வெட்கப்பட்டுக்க. கவத்ல முட்டிக்க. தலைகீழா நின்று அழு. எனக்கென்ன? நான் ஒரு கிரிமினல். எனக்கு எதுக்கு தேசப்பற்று கீசப்பற்றெல்லாம்? பாகிஸ்தான் ஒரு கிரிமினல்கள் தேசம். நான் அவர்கள் சார்பாக பேசாமல் எப்படி இருப்பேன்?''

''மகிழ்ச்சி. அப்படியே இரு!''

''பேசி நேரத்தை விரயம் பண்ணாதே. சென்னை ட்ராபிக் பத்தி எனக்குத் தெரியாதா? கல்யாணத்துக்கு கிளம்பினா வளைகாப்புக்குத்தான் போய் சேரமுடியும்! இன்னும் ஐம்பதே நிமிஷம். கமான் குயிக்!''

தொடர்பு அறுந்தது. தேவா பரபரப்பாய் டியாராவிடம் ஓடிவந்தார்.

''டியாரா! ஒரு விஷயம் தனி யாக உன்னிடம் பேச வேண்டும்!''

''இங்கேயே சொல் லலாமே?''

''சொன்னால் கேள். தனியாக வா!''

''வைரத்துடன் நான் போயாக வேண்டும் தேவா. இன்னும் நாற்பத்தி ஒன்பதே நிமிஷம் பாக்கி!''

''நான் சொல்லப் போகும் விஷயம் வைரத்தை பற்றித்தான்!''

பிரசன்னாவும் சந்தியாவும், ''நாங்க அறைக்கு வெளியே போறோம். நீங்க பேசுங்க!'' இருவரும் வெளியே நடந்து போயினர்.

''இப்பச்சொல்லுங்க தேவா!''

''இத எப்டிச் சொல்றதுன்னு தெரியல டியாரா!''

''தேவா! ஆர் யூ ப்ளேயிங்? கம் அவுட் பிராங்க்லி!''

ஒரு மைக்ரோரிக்கார்டரை நீட்டினார் 'ஆன்' பண்ணி. மைக்ரோரிக்கார்டர் சுழல ஆரம்பித்தது. டியாராவிடம் முகம் கறுத்து திகிலுற்று ஸ்தம்பித்தது!

◆இந்தி நடிகர் 'விவேக் ஒபராய்' சுனாமியால் பாதிக்கப்பட்ட தேவனாம்பட்டினம் கிராமத்தையே தத்து எடுத்துக்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதைப் பார்க்கும்போது, 'மனித நேயம்' 'வேற்றுமையில் ஒற்றுமை' போன்ற சொற்களுக்கு பொருள் புரிகிறது. இவர் சுனாமி நிவாரண நிதிக்கு 25 லட்சம் நிதி உதவி அளித்ததோடு, இவரது புதிய படமான 'கிஸ்னா'வின் முதல் நாள் வசூல் முழுவதையும் சுனாமி நிதிக்கு அளிக்க திட்டமிட்டுள்ளார்.

-கரவீந்திரன்





## 10

டெலிபோன் பேச்சு பதிவு ஓடியது.

''ஹலோ!'' இரகசியம் பேசியது பெண்குரல்.

''ஹலோ சந்தியா! என்ன விஷயம்? போனில் பேசாதே-போலீஸ் ஒட்டுக் கேட்கும்- என எச்சரித்திருந்தும் ஏன் பேசுகிறாய்?''

''ஹைதராபாத்திலிருந்துதானே பேசுகிறேன்! போலீஸ் ஒட்டு கேட்க வாய்ப்பு இல்லை!''

''நீ சொல்வது தவறு!''

''உன் அட்வைஸ் போதும்! நீ செய்வது சரியா?''

''நான் என்ன செய்தது உனக்கு சரியில்லை?''

''எனது மும்பைத்தோழி ஆயிஷாதான் உன்னை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். நீ மிகவும் நம்பிக்கையானவன்- காலால் சொன்ன வேலையை தலையால் செய்வாய் - என சர்டிபிகேட் குடுத்தாள். நானும் உனக்கு அஞ்சு இலட்சம் பேசி ரெண்டு இலட்சம் அட்வான்ஸ் குடுத்து அமர்த்தினேன்!''

''ஸ்டாப்ஸ்டாப் என் பழைய சம்பவங்களை டிவி சீரியல்காரர்கள் போல் ரிகேப் பண்ணுகிற. ய்? நேரடியா விஷயத்துக்கு வா!''

''நான் உனக்கு சொன்னது என்ன, தற்சமயம் நீ செய்வது என்ன?''

''என்ன என்ன என்ன?''

''என் அருமை மகன் அருணை கடத்திச் செல். பாதுகாப்பான இடத்தில் அவனை வை- அவனுக்கு சிறுகாயமும் ஏற்படாம பாதுகா- என் கணவனிடம் அம்பது கோடி ரூபா பெறுமானமுள்ள உஸ்மான் அலி பாதுஷாவின் வைரத்தைக்கேள்- என் கணவனுக்கு அருண் மீது கொள்ளைப்பிரியம் - பிசினஸில் பத்து பைசா யாருக்கும் விட்டுத்தராத என் கணவன் மகனுக்காக உயிரையும் கிள்ளித்தருவான் என்றேன் தலையாட்டினாய். என் மகனை எனது கணவனிடம் ஒப்படைத்துவிட்டு வைரம் பெறு- பெற்ற வைரத்தை என்னிடம் கொடுத்துவிட்டு மீதி மூன்று இலட்சத்தை வாங்கிப்போ என்றிருந்தேன். அதற்கும் தலையாட்டினாய். ஆனால் இப்போது அருணின் விரலை வெட்டி அனுப்பியிருக்கிறாய் அல்லது வேறொரு பையனின் விரலை வெட்டி எங்களை பயமுறுத்துகிறாய். போகிற போக்கை பார்த்தா வைரத்தை நீ என்னிடம் தரமாட்டாய் போல!''

''சபாஷ் கண்டுபிடிச்சிட்டியே...''

''அடப்பாவி!''

''உன் தோழி ஆயிஷாவுக்கு என்னைப்பற்றி தெரிந்தது கொஞ்சம். என்னை நீ நேரே பார்த்தாயே - நான் என்ன உன் கண்களுக்கு சில்லரைகிரிமினல் போலவா தெரிந்திருக்கிறேன்? அஞ்சு இலட்சம் பணம் எனக்கு பிசாத்து. நீ உன் கணவனுக்கு துரோகம் பண்ணுகிறாய். அவனது பணம் உனக்கு சொந்தமானதுதானே? அதை நீ அவன் மூலம் பெற்ற குழந்தையை கடத்தி மிரட்டி அவனிடமே அம்பது கோடி ரூபா பெற ஆசைப்படுகிறாய். இது எவ்வளவு பெரிய நம்பிக்கைமோசடி? அவனிடமே

அம்பது கோடி ரூபா பெற ஆசைப்படுகிறாய். இது எவ்வளவு பெரிய நம்பிக்கை மோசடி? ஒரு நம்பிக்கைத் துரோகிக்கு நான் எதுக்கு விசுவாசமா நடக்கனும்? ஒரு நம்பிக்கைத்துரோகத்துக்கு கவுன்ட்டர் அட்டாக் இன்னொரு நம்பிக்கைத்துரோகம்தான். உன் மூலம் வரும் ஐம்பதுகோடி பணம் என் எதிர்காலத்துக்கு மிகவும் உதவும். உன் போட்டோவை அனுப்பிவை. என் புதிய பங்களாவின் வரவேற்பறையில் மாட்டி வைத்துக்கொள்கிறேன்!''

''பாஸ்டர்ட்!''

''யாரைப் பாத்துடி திட்ற? அன்னைக்கே உதவிகேட்டு வந்த உன்னை நான் ருசிபாத்திருக்கனும். கல்யாணமான பெண்கள் எச்சில் பண்டம் என்கிற நினைப்பில் உன்னை விட்டுவிட்டேன். அதற்காக என்னை பாஸ்டர்ட் என்கிறாயா?''

''வேண்டாம் விளையாடாதே. இருபது லட்சம் தருகிறேன். வைரம் கைக்கு வந்தவுடன் பேசியபடி குடுத்துவிடு!''

''முடியாது சந்தியா. இனி இதுபற்றி என்னுடன் பேச முயற்சிக்காதே. வைரம் என் கைக்கு வந்தவுடன் நான் உன் கண்ணிலோ டியாரா கண்ணிலோ போலீஸ் கண்ணிலோ படாத தூரத்துக்கு போய்விடுவேன். இந்த கடத்தல் சம்பவத்துக்கும் உனக்கும் சம்பந்தமில்லாதது போல தொடர்ந்து நடந்துக்க. வைரம் கிடைச்சிட்டா உன் பய்யனை ஒண்ணும் பண்ணாம திருப்பி தந்திடுவேன். உன் நம்பிக்கைத் துரோகத்துக்கு விதிக்கப்பட்ட அபராதமா இந்த வைரம்னு நினைச்சிக்க!'' அழ ஆரம்பித்தாள் சந்தியா.

''சீச்சீச்சீச்சீ... அழுதுதொலைக்காதே. இனி இந்த நம்பரில் நான் கிடைக்கமாட்டேன். வை சந்தியா!'' தொடர்பு அறுந்தது.

திகைப்பு சற்றும் குறையாமல் நின்றிருந்தான் டியாரா.

''இது ஒரிஜினல் சந்தியா குரல்தானா?''

''வாய்ஸ்லாப் அனுப்பி பரிசோதித்தேன். கோபதி குரலும் சந்தியாகுரலும் ஒரிஜினலே!''

''ஒரு குடும்பத்தலைவி இப்படி செய்வாளா?''

''மேல்தட்டு பெண்கள் பெரும்பாலும் திருமண உறவை சீரியஸாக எடுத்துக் கொள்வதில்லை. நிறைய எக்ஸ்ட்ராமரைட்டல் அபயர்ஸ். கணவன் மனைவியைத் தட்டிக் கேட்பதில்லை. காரணம் அவனுக்கும் நிறைய எக்ஸ்ட்ராமரைட்டல் அபயர்ஸ். டிட் பார் டாட்... யார் கண்டது? சந்தியாவுக்கு ஏதாவது கள்ளக்காதல் இருக்கலாம். கள்ளக்காதலனுக்கு பணத்தை மகனின் உயிரைப் பணயம் வச்சு திரட்டித் தராளோ என்னவோ?''

''எனக்கு பாடிலாங்குவேஜ் நன்கு தெரியும். சந்தியா கெட்ட நடத்தையுள்ள பெண்ணல்ல. வேறு எதுவோ ஒரு விஷயம் ஒளிந்திருக்கிறது!''

''நீ எப்போதும் இப்படித்தான். பெண்களுக்கு ஆதரவாய் பேசுவாய். சென்னையிலேயே எனக்கு தெரிந்த ஏழெட்டு மேல்தட்டு பெண்கள் டிரைவரை கள்ளக்காதலனாக வைத்திருக்கிறார்கள். இப்போது நிறைய இளைஞர்களைப் பார். இப்படிப்பட்ட பெண்களின் கார்களுக்கு டிரைவராய் போகத் துடிக்கிறார்கள்!''

''கள்ள உறவு எல்லா இடத்திலும்தான் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தை ஹைலைட் பண்ணுவது அபத்தம்!''



''நாமொன்றும் சாலமன் பாப்பையா தலைமையில் பட்டிமன்றம் நடத்தவில்லை. இந்த விஷயத்தை எப்படி அணுகப்போகிறாய் டியாரா?''

''இன்னும் முப்பது நிமிடங்கள் தான் அவகாசம். இந்த நிலையில் திருமதி சந்தியா பிரசன்னாவிடம் தன்னிலை விளக்கம் கேட்பது சரியல்ல. சந்தியாவுக்காக இல்லாவிட்டாலும் பிரசன்னாவுக்காவது அருணை நாம மீட்டாக வேண்டும். அருணை மீட்டுக் கொண்டு வரும்வரை தனிப்பட்ட நீங்களோ காவல்துறையோ சந்தியாவை ஒரு வார்த்தை விசாரிக்கக்கூடாது!''

தயங்கினார் தேவா. ''நீ இந்த விஷயத்தை டீல் பண்ணும் விதம் சரிதானா டியாரா?''

''என் மனசாட்சி என்ன சொல்லுதோ அதைத்தான் இதுவரைக்கும் நான் செஞ்சு வந்திருக்கேன். அப்படி நான் செஞ்சதில் 99 சதவீதம் சரியாத்தான் இருந்திருக்கு தேவா!''

''ஓகே டியாரா! ஈசிஆர் சாலை டோல்கேட்டுக்கு செல்லும் வழிய ட்ராபிக்-ப்ரீ செய்யப்பட்டுள்ளது. கிளம்பு வெற்றியுடன் திரும்புவோம்!''

கட்டைவிரல் உயர்த்தினார். உயர்த்தினான். டோல்கேட்டுக்கு பறந்தனர்.

## 11

கிழக்கு கடற்கரை சாலை இரவு வெளிச்சத்தில் அகல ரம்மியம் காட்டியது.

டோல்கேட்டுக்கு முன் போலீஸ் படை குவிந்திருந்தது. டோல்கேட்டிலிருந்து அறுபதடி தூரத்தில் ஒரு ஹெலிகாப்டர் இளைப்பாறிக் கொண்டிருந்தது.

டியாராவின் கார் பேய்த்தனமாய் சீறிப் பாய்ந்து சறுக்கி நின்றது.

கோபதி கொடுத்த கெடு முடிய இன்னும் இருபதே நொடிகள்!

காரிலிருந்து இறங்கினான் டியாரா. இரு கைகளையும் உயர தூக்கி ஆட்டினான். மெஹாபோனில் தேவா கூறினார். ''மிஸ்டர் கோபதி! நீ கேட்டவைரம் ரெடி. நீ சொன்ன கெடுவுக்குள் நாங்கள் வந்துவிட்டோம். நீ எங்கிருக்கிறாய்?''

ஓர் ஆம்புலன்ஸ் வாகனம் ஸைரன் சப்தம் எழுப்பியபடி டியாரா தேவாவைத் தாண்டிப்போனது.

பாதுகாப்பான தூரம் போய் நின்றது.

அதிலிருந்து கோபதி இறங்கினான். அவனின் இருபுறமும் ஆயுதம் ஏந்திய மெய்க்காப்பாளர்கள். உடல் முழுதும் வெடிமருந்து கட்டிக்கொண்ட கோபதியின் வைரமதிப்பீட்டாளன் மெதுவாக டியாரா நோக்கி நடந்தான்.

உலாதொலைபேசி சிணுங்கியது. எடுத்து காதில் இணைத்தான் டியாரா.

''டஸ்புஸ்ஸுன்னு மூச்சு வாங்க ஓடிவந்திருக்க போல. உன்னை மாதிரி அல்லது லேகியம் விக்றவன் மாதிரி என்னால மெஹாபோன்ல கத்தமுடியாது. விஞ்ஞானம் முன்னேறிப்போச்சு. அதுக்கு ஏத்த மாதிரி

போலீஸை ஹைடெக் பண்ண மாட்டிங்களாடா மயிருகளா?''

''உன் அட்வைஸ்க்கு நன்றி! நீ கேட்ட ஹெலிகாப்டர் எரிபொருள் நிரப்பப்பட்டு உனக்காக தயார் நிலையில் நிற்கிறது!''

''கோஸ்டல் கார்டு ஹெலிகாப்டர்?''

''இல்லை! ஏன் கேக்ற?''

''கோஸ்டல்கார்டு ஹெலில் ஏறமாட்டேன். நமக்கு அது ராசி இல்லப்பா!''

''ப்ரைவேட் பார்ட்டிக்கு சொந்தமானதுதான்!''

''நம்ம டீலிங்குக்கு முன்னாடி சில செக்கிங்குகளை செய்தாக வேண்டும் நான் (மெய்க்காப்பாளர்களில் ஒருவரை அழைத்து) நீ போய் அந்த ஹெலிகாப்டரில் ஏதாவது ஆயுதங்கள் ஆட்கள் ஒளிந்திருக்கின்றனவா என சோதித்துவிட்டு அந்த ஹெலியின் பைலட்டை என்னிடம் கூட்டிவா!''

மெய்க்காப்பாளன் நடந்து போனான்.

வைரமதிப்பீட்டாளன் வைரத்தின் தரத்தை சோதிக்க ஆரம்பித்தான்.

தேவா டியாராவின் காதுகளில் கிசுகிசுத்தார். ''காருக்குள் மூன்று சிறுவர்கள் இருக்கிறார்கள் டியாரா. இவர்களில் யார் அருண்? அல்லது இந்த மூவரில் யாருமே அருண் இல்லையா? - என கேள்விகள் எழுகின்றன டியாரா!''

உலாதொலைபேசியில், ''கோபதி!காருக்குள் இருக்கும் சிறுவரில் யார் அருண்?''

சிரித்தான் கோபதி. ''மூவருமே அருண்தான்!''

''என்ன உளர்ற?''

''ஏன் மூணுபேரு ஒரே பெயரை வைச்சுக்கக் கூடாதா? பிரசன்னாவின் மகன் அருணை இதோ இப்போது காட்டுகிறேன்!''

காரின் பின் கதவைத்திறந்து நடுவில் அமர்ந்திருந்த அருணை வெளிக்கொண்டு வந்தாள்.

ராட்சச மஞ்சள் வெளிச்சத்தில் கண்கள் கூசினான் அருண்.

''உண்மையான அருணுடன் எதுக்கு இரு டூப்ளிகேட்டுகள் கோபதி?''

''எல்லாம் ஒரு ஸேப்புக்காகத்தான். நீங்க ஏதாவது கோக்மாக் பண்ணினா பதிலுக்கு நான் ஏதாவது பண்ணனும்ல? பரிவர்த்தனை சுமுகமாக இருந்தா ஒரிஜினல் அருண் உங்களுக்கு கிடைப்பான். இல்லேன்னா...'' தொடர்ந்து பேசாமல் சிரித்தான் கோபதி.

பிரசன்னாவும் சந்தியாவும் டியாராவிடம் ஓடிவந்தனர்.

''கோபதி காட்டியது நிஜமான அருண்தானானு நாங்க பார்க்கனும்!''

''கோபதி! நீ வைரம் நிஜமானதுதானான்னு பாக்றமாதிரி எங்கள்ல ஒருத்தர் உன் காருக்கு வந்து அருணை நிஜமானவன்தானான்னு பார்க்க நீ அனுமதிக்கனும்!''

''அருணின் தாயாரை அனுப்பு டியாரா!''

சந்தியா காரை நோக்கி நடந்தாள். கோபதியை நெருங்கினாள். கோபதியை முறைத்தாள். காரிலிருந்து ஏறக்குறைய வெளி இழுக்கப்பட்ட அருணை கட்டிப்பிடித்து ஆனந்தக்கண்ணீர் வடித்தாள் சந்தியா.

''வா ராஜா போகலாம்!'' அருணை இழுத்துக்கொண்டு ஓட முயற்சிக்க...



''பரிவர்த்தனை முடியும் முன் அவசரப்படாதே!''

ஆனாலும் சந்தியா அருணுடன் ஒடியபடி ஒளித்திருந்த துப்பாக்கி எடுத்து கோபதியை சுட்டாள். தோட்டாக்கள் குறிதவறி எங்கெங்கோ பாய்ந்தது. ஸ்கிப்பிங் கயிறு இல்லாமல் ஸ்கிப்பிங் ஆடினான் கோபதி. தோட்டா தீர்ந்த துப்பாக்கியுடன் நிற்கும் சந்தியாவை ஒரு அறை அறைந்தான் கோபதி. ஒடுங்கியபடி நிற்கும் அருணை காருக்கு இழுத்துச் சென்றான். தூரத்து தரையில் சிதறிய சந்தியாவை பார்த்து கத்தினான். ''கொஞ்ச நேரத்ல பெரும்குழப்பம் பண்ண பாத்தியே? சுட்டுக் கொன்னிருப்பேன். உன்னை பொம்பளையாச்சேன்னு விடுறேன். எந்திரிச்சு போ!''

கன்னத்தைத்தடவியபடி டியாராவிடம் நடந்துவந்தாள் சந்தியா. சந்தியாவை ஆதரவாய் அணைத்துக்கொண்டான் பிரசன்னா. ''ஏன் அவசரப் படுற?''

வைரமதிப்பீட்டாளன் திருப்தியானான். திரும்பி கோபதிக்கு கட்டைவிரல் உயர்த்தினான். நொடி தாமதித்து கோபதி நோக்கி நடந்தான்.

''டியாரா! சோதித்த வைரத்தை அதற்குரிய பரிசு பெட்டியுடன் உனது காரின் பேனட்டில் வை. தொடர்ந்து அது என் கண் பார்வையிலேயே இருக்கட்டும்!''

''அப்டியே செய்கிறேன் கோபதி!''

ஹெலிகாப்டரை முழுக்க முழுக்க சோதித்தான் கோபதியின் மெய்க்காப்பாளன். பைலட்டை கோபதியிடம் கூட்டிவந்தான்.

''யோவ் பைலட் பெருசு! உன் அடையாள அட்டை எங்கே?''

வயதான பைலட் அடையாள அட்டை நீட்டினார். பைலட்டை BODY FRISKING பண்ணினான் கோபதி. தலைகேசத்தை பொய்யானதா என இழுத்து பார்த்தான். முகத்தில் ஏதாவது மேக்கப் சாகசம் பண்ணப்பட்டுள்ளதா என ஆராய்ந்தான்.

''எங்க- உன் பெயரை வாயால ஒரு தடவை சொல்லு!''

பைலட் கூறினார். ''மார்ட்டின்!''

''பேசவும் நடக்கவும் இவ்ளவு தடுமாறுற... நீ எப்டிய்யா ராத்திரி கடல்மேல ஹெலி செலுத்தி என்னை பாக் கப்பல்ல இறக்குவ?''

சிரித்தார் மார்ட்டின்.

''முடியும்னு சிரிக்கிறயா, முடியாதுன்னு சிரிக்கிறயா?''

''முடியும்!''

அதிநவீன வயர்லெஸ் எடுத்து பாக் கப்பலுடன் தொடர்பினான்.

''அஸ்ஸலாமு அலைக்கும் காப்டன்!''

''அலைக்கும் ஸலாம்!''

''கப்பல் இந்தியக்கரையிலிருந்து எத்தனாவது மைலில் கப்பலை நிறுத்தி வைத்துள்ளீர்கள் கேப்டன்?''

''முப்பதாவது நாட்டிகல் மைலில்!''

''இந்தியக் கப்பல்கள் ஏதாவது ராடாரில் தென்படுகின்றனவா?''

''ஆம்!''

''எவ்ளவு தூரத்தில்?''

''இந்தியக்கரையிலிருந்து பனிரெண்டாவது நாட்டிகல் மைலில்!''

''நான் உங்கள் கப்பலில் இறங்க முயற்சிக்கும்போது இந்திய ரோந்து கப்பல் எவ்வகையிலாவது வாலாட்ட வாய்ப்பு உண்டா?''

''சாத்தியம் குறைவுதான், கோபதி!''

கோபதி வயர்லெஸ்ஸை மௌனமாக்கினான். ''பைலட்! பரிவர்த்தனை முடிந்ததும் நீங்கள் என்னையும் என்னுடைய இரு மெய்க்காப்பாளர்களையும் வைர மதிப்பீட்டாளரையும் பாகிஸ்தான் கப்பிலின் மீது தாழப்பறந்து கயிற்று ஏணி மூலம் இறக்கிவிடுங்கள். எங்களை இறக்கிவிட்டபின் நீங்கள் இந்தியகரைக்கு வரலாம். ஆனால் ஒரு எச்சரிக்கை பைலட். நான் சொன்னதற்கு மாறாக நடந்து கொண்டீர்கள் என்றால் உங்களை சுட்டுக்கொன்று கடலில் வீசியெறிந்துவிட்டு நானே ஹெலிகாப்டரை செலுத்தி பாக் கப்பலுக்கு போவேன். போலீஸ் ஏதாவது கிருத்துருவம் பண்ண சொல்லிக்குடுத்திருக்கா?''

''இல்லை சார்!''

உடலை ஒரு தடவை பலமாக சேவல் போல் சிலுப்பிக்கொண்டான் கோபதி.

''டியாரா!''

''சொல்லு கோபதி!''

''ஏற்பாடுகள் எனக்கு திருப்திகரம். பரிவர்த்தனை ஆரம்பம். நீ என்ன செய்கிறாய்? வைரத்தை எடுத்துக்கொண்டு என்னை நோக்கி நடந்துவா. நான் அருணுடன் உன்னை நோக்கி நடந்து வருகிறேன். இருவரும் மையப் புள்ளியில் சந்தித்து பொருட்களை பரிமாறிக்கொள்வோம். பின் நீ திரும்பி அருணுடன் காவல் துறைவாகனத்துக்கு நட. நான் வைரத்துடன் திரும்பி ஹெலிகாப்டர் நோக்கி நடக்கிறேன். நான் ஹெலிகாப்டரில் புறப்பட்டு போகும்வரை போலீஸ் எதுவும் சில்லுண்டித்தனம் செஞ்சிடாம பாத்துக்க!''

''சரி!''

''உனக்கு புரோக்கர் கமிஷன் தர ஆசைப்படுகிறேன் டியாரா!''

''உன் உயிர்தான் எனக்கு தேவையான புரோக்கர் கமிஷன். நீ எப்படி தருவாய்



ஆங்கிலேயர்களின் தேசிய நடனம் பாலேட் ஆகும். நிகழ்ச்சி துவங்கும் முன் நடிகை ஒருவர் தன் காலணியை சரி செய்து கொள்ளும் காட்சி.

–க.ரவீந்திரன்



கோபதி. அதிகபிரசங்கித்தனமாக இனிமேலும் பேசாது புறப்படும் வழியைப்பார்!''

''அதுவும் சரிதான்!'' டியாரா வைரத்தை கையில் எடுத்துக்கொண்டான். மெதுவாய் மிக மெதுவாய் கோபதி நோக்கி நடக்க ஆரம்பித்தான். கோபதி அருணுடனும் வைர மதிப்பீட்டாளன் உடனும் டியாரா நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

இருவரும் ஒரு புள்ளியில் மோதிக்கொண்டனர்.

வைரத்தை வாங்கிய கோபதி வைர மதிப்பீட்டாளனிடம், ''நீ சோதித்த வைரம்தானே இது?''

''ஆமா சார்!''

வைரத்தை எடுத்துக்கொண்டு அருணை டியாராவிடம் கொடுத்தான் கோபதி. டியாராவின் முகமும் கோபதியின் முகமும் மிக மிக நெருக்கமாய்.

''என்னடா பாக்ற?''

''சும்மா... ஜஸ்ட் லைக் தட்டுடா!''

''அ... நீயும் டா போட்டு பேசுற!''

''பின்ன? பரிவர்த்தனை முடிஞ்சு போச்சு... அப்றமென்ன? உன் லெவலுக்கு நானும் இறங்கிவர வேண்டியதுதானே?''

இளக்காரமாய் சிரித்தபடி கோபதி ஹெலிகாப்டருக்கு தன் மூன்று சகாக்களுடன் நடந்து ஏறினான். ஹெலி வானேறியது. வைர மதிப்பீட்டாளனை உயர ஹெலியிலிருந்து கடலுக்குள் தள்ளி ரிமோட்டை இயக்கினான் கோபதி. சிறுசிறுமாமிசத்துண்டுகளாய் சிதறினான் வைரமதிப்பீட்டாளன்.

## 12

ஹெலிகாப்டர் வெகுதூரத்தில் புள்ளியாய் தெரியும் பாகிஸ்தான் கப்பல் நோக்கி பறக்க ஆரம்பித்தது.

சிரித்தான் கோபதி. ''இன்னும் இருபதே நிமிஷத்துல நான் பாக் கப்பல்ல இருப்பேன். அதுக்குப்பிறகு நான் ஆயுளுக்கும் ராஜவாழ்க்கை வாழுவேன். பாகிஸ்தான் போன பிறகு பொய்ப் பெயர் சூட்டிக்கிட்டு பாஸ்போர்ட் எடுத்துக்கிட்டு ஸ்விட்ஜர்லாந்து போய்டுவேன்.''

ஹெலியை செலுத்திக்கொண்டிருந்த பைலட்டின் முகம் கொடூரமாய் மிளிர்ந்தது.

கண்ட்ரோல் பேனலில் இருந்த எஃகு கைகள் துடித்தன.

அரைநொடி கூட செலவாகாத வேகத்தில் அமர்நிலையில் இருந்த பைலட் ஹெட்போனை கழற்றி ஒரு மெய்க்காப்பாளனின் முகத்தை சாத்தி இன்னொரு மெய்க்காப்பாளனின் நடுநெஞ்சை பிசாசுத்தனமாக உதைத்தான்.

உதைக்கப்பட்ட மெய்க்காப்பாளன் 'ட' வடிவில் வளைந்து ஹெலிகாப்டரிலிருந்து ஆழ்கடலுக்கு பல்டியடித்தான்.

விழுந்த நொடி கழித்து 'ஸ்ப்ளாச்' சப்தம் பத்தடி உயரதுக்கு எழுந்தது. மூக்கில் இரத்தம் வழியும் மெய்க்காப்பாளனின் மூக்கில் ஒரு

அதிரடிக்குத்து விட்ட பைலட் சுழன்னு கோபதியின் துப்பாக்கியைப் பிடித்தார்.

சுடமுயற்சிக்கும் துப்பாக்கியுடன் முறுக்கி முரண்டு பிடித்தபடி இரத்தம் சொட்டும் மூக்குடன் மீண்டும் தாக்கமுற்படும் மெய்க்காப்பாளனை கால்காளலேயே தொடர்ந்து தாக்கினார் பைலட்.

தாறுமாறாய் சுழன்றபடி ஏகத்துக்கு அலறியபடி அவனும் கடலின் மடிக்குப்போனான்.

முறித்த கையிலிருந்து துப்பாக்கியை பறித்துக்கொண்டார் பைலட்.

''அசைஞ்சா சுட்ருவேன்! என்ன பைலட் பெண் குரல்ல பேசுறார்னு திகைக்றியா? என்னை உனக்கு அடையாளம் கண்டுபிடிக்கத்தெரியல. நான் டிடக்டிவ் ஸிஜா. நான் பைலட் ஒப்பனைல வர என்னென்ன மேக்கப் தகிடுதத்தங்கள் செய்ய வேண்டியிருந்தது தெரியுமா கோபதி. மார்பகங்களை நெஞ்சோடு நெஞ்சாக நசுக்கி பிளாஸ்டர் சுற்றியிருக்கிறேன். எனது ஸ்டெப் கட்டிங்கை சம்மர்கிராப் பண்ணியிருக்கேன். ஆண் குரலில் பேச இஎன்டி ஸ்பெஷலிஸ்ட் உதவியிருக்கிறார். என்னை போய் செக் பண்ணுறியே ஆயுதம் இருக்கான்னு. எனது கை ஒவ்வொன்னும் எனது கால் ஒவ்வொண்ணும் அதிநவீன இயந்திரதுப்பாக்கிகள். மொத்தத்தில் நானொரு ஒன்விமேன் ஆர்மி. பாகிஸ்தான்பத்தி பெரிய புடுங்கிமாதிரி பெருமையா பேசுற? என் ஒருத்தியை சமாளிச்சு காண்பிடா. உன் பேத்தலை கன்ஸிடர் பண்றேன்!''

''துப்பாக்கியை கைல வச்சுக்கிட்டு நிராயுதபாணியான என்கிட்ட வீரம் பேசுறியா குண்டச்சி!?''

ஹெலிகாப்டர் தாறுமாறாய் வேகம் பிடித்து உயரம் கூடி உயரம் குறைந்து அங்குமிங்கும் சீறியது.

கண்ட்ரோல் பேனலை பிடித்து ஹெலியை இயக்கியபடி பின்னுக்கு திரும்பினாள் ஸிஜா.

''கோபதி! நீ தமிழ்நாட்டு போலீஸையும் டிடக்டிவ் டியாரா ராஜ்குமாரையும் குறைவா மதிப்பிட்டுட்ட. நீ டியாராகிட்ட பரிவர்த்தனை பண்ணிட்டு வந்திருக்ற வைரம் போலியானது தெரியுமா கோபதி!''

''பொய் சொல்ற?''

''இல்ல கோபதி. நீ ஆடுன ஆட்டத்தை நாங்களும் மாத்திப்போட்டு ஆடுனோம். உனக்கு வைர மதிப்பீடு செய்ய உதவப்போகிறவனின் மனைவி குழந்தைகளை போலீஸ் நேத்தே கஸ்டடில எடுத்திருச்சு. மனைவி குழந்தையை தேடின அவன் கூட நாங்க பேரம் பேசினோம். போலி வைரத்தை நிஜவைரம்னு உன்கிட்ட சர்ட்டியை பண்ணச்சொன்னோம். அவனும் பேசிக்கொண்டபடி போலி வைரத்தை நிஜமென்று உன்னிடம் கூறினான். மனைவிமகன் மகளை நாங்க கஸ்டடில வைக்றவரைக்கும் அவன் உனக்கு விசுவாசமாத்தான் நடந்திருக்கான். அவனை நீ மிருக்கத்தனமா சுட்டு கடல்ல வீசிட்ட!''

''எனக்கு நன்றி உணர்ச்சின்னு எதுவும் கிடையாது. வைரம் நிஜவைரம் இல்லையா? ஆ!'' நெற்றியில் அறைந்து கொண்டான். சட்டையைக் கிழித்துக் கொண்டான்.

ஹெலிகாப்டரின் இருக்கைகளை பிய்த்து 'எறிய ஆரம்பித்தான்.

கண்ட்ரோல் பேனலை உடைத்து நொறுக்க ஆரம்பித்தான்.



தடுக்க முயன்ற ஸிஜாவுக்கும் கோபதிக்கும் பெரும் சண்டை மூண்டது. துப்பாக்கியை வீசி எறிந்துவிட்டு கோபதியை தாக்க ஆரம்பித்தான்.

ஸிஜாவின் மேற்சட்டையை கிழித்தெறிந்தான். ஸிஜாவின் முகத்தை பிறாண்டினான்.

அவளின் தலையைக் கொண்டு போய் ஹெலியின் உள் உலோக பாகத்தில் மோதினான். வலது காதைக் கடித்தான். வெறிகொண்ட எருது வாய் எழுந்தாள். தொடர்ச்சியாய் கோபதியின் முகத்தில் குத்துவிட்டாள். சடாரென்று கீழே குனிந்து கோபதியின் கால்களை வாரிவிட்டாள்.

பொங்!

ரப்!

தடார்!

கெட்ட கெட்ட வார்த்தைகளை உதிர்த்தபடி ஸிஜாவின் கைகளை முறுக்கி அவளுடன் உருண்டான்.

ஹெலிகாப்டருக்குள் ஒரு மினி WWF யுத்தம் நடந்தது.

கால் ஷுவுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சிங்கிள் ஷாட் மினி பிஸ்டல் எடுத்து ஸிஜாவை சுட்டான் கோபதி.

ப்யூங்!

தோட்டா வலது நெஞ்சைத் துளைத்தது. இரத்தம் பீய்ச்சியது.

இடுப்பில் ஒளித்துவைக்கப்பட்டிருந்த கத்தியை எடுத்து ஸிஜாவின் உடல்பாகங்களை பழுது பார்த்தான்.

ஏறக்குறைய ஸிஜாவின் உடல் முழுக்க இரத்தம் சொட்டியது.

கோபதியின் இடது கை கத்தியைப் பிடித்து காற்றில் சுழற்றி கோபதியின் குரல்வளையில் குத்திச் சொருகினாள் ஸிஜா.

க்ளக்! குத்தின கையை கோபதி தடுக்க முயல—

ஸிஜா கத்தியை மேலும் கோபதியின் குரல்வளையில் இன்னும் ஆழமாகப் பதிக்க முயல—

''பாரத் மாதா கி ஜெய்!'' என முழங்கியடி கத்தியை முந்திய இடத்தில் ஆழவட்டம் போட்டாள் ஸிஜா.

ஏறக்குறைய முழுதும் வெட்டப்பட்ட கோபதியின் தலைதனியே தொங்கியது.

மீண்டும் கத்தியை வைத்து முழுவட்டம் போட்டு கோபதியின் தலையை தனியே எடுத்தாள். கோபதியின் தலையைப் பார்த்து திட்டினாள். காறித்துப்பினாள். உதைபந்து விளையாடினாள். வயர்லெஸ் அழைத்தது.

''பாக் கப்பல் கேப்டன் பேசுகிறேன். ஏன் வானத்தில் உன் ஹெலிகாப்டர் தாறுமாறாய் பறக்கிறது? நான் எப்படி உதவ?''

''உனக்கு பதில் சொல்ல கோபதி உயிருடன் இல்லையடா பாகிஸ்தான் நாயே!''

''பொய்!''

''இதோ பார் துரோகியின் தலை!'' தலையை உதைத்து ஹெலிக்கு வெளியே பறக்க வைத்தாள் ஸிஜா.

இன்ப்ரா ரெட் ஹோமிங் டிவைஸ் உள்ள பைனாக்குலரால் தலை பறப்பதைப் பார்த்துவிட்டான் பாகிஸ்தான் கேப்டன்.

''அந்த ஹெலிகாப்டரை சுட்டுத்தள்ளுங்கடா!''

கப்பலின் ராக்கட் லாஞ்சர் அண்ணாந்தது. குறி பார்த்து இயங்கியது.

...ஸிஜா தன்னைக்குறி பார்த்து ராக்கட் சீறி வருவதை பார்த்துவிட்டாள். ஹெலியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் கடலுக்கு குதித்தாள்.

நீருக்குள் வெகுஆழம் போய் மேல்பரப்பு வந்தாள்.

பாகிஸ்தான் கப்பலின் மேற்தளம் பரபரப்பானது. நீரின் மேல் தெரியும் ஸிஜாவின் தலையைச் சுட ஆரம்பித்தனர்.

இந்திய கப்பற்படை கப்பல் பதிலுக்கு பாக் கப்பலை சுட்டது. கப்பற்படை வீரர்கள் அறுவர் கடலுக்குள் குதித்தனர்.

கடலுக்குள் பதிக்கப்பட்டிருந்த விசேஷ கண்ணிவெடிகள் வெடிக்க ஆரம்பித்தன.

ஸிஜா நீந்த முடியாமல் தத்தளித்தாள். இருகைகள் செயலிழந்து போயின. மயங்கி கடலுக்குள் மூழ்கப்போனாள்.

நீர்மூழ்கி கவசம் அணிந்த இருவீரர்கள் ஸிஜாவை ஏந்தி நீரின் மேல்வட்டத்தில் அவளது தலை இருக்குமாறு வைத்தபடி தங்கள் கப்பலுக்கு நீந்த ஆரம்பித்தனர்.

பாகிஸ்தான் கேப்டனிடம் உதவி கேப்டன் கத்தினான். "இந்திய கப்பல் சிறிதுசிறி தாக நம் கப்பலை இந்திய கடல் எல்லைக்குள் இழுக் கிறது. ஆபத்து! இத்துடன் நாம் தாக்குதலை நிறுத்தி விட்டு சர்வதேசகடல் எல்லைக்கு மீள்வோம்!"

"கோழையே எட்டிப் போ!" பாகிஸ்தானின் கப்பல் தொடர்ந்து இந்திய கடல்எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தது.

ஸிஜாவை இந்திய கப்பற்படை வீரர்கள் தங்களது கப்பலுக்குள் ஏற்றினர். ஸிஜாவுக்கு முதலுதவி செய்யப்பட்டது.

தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை. ஏறக்குறைய பாக் கப் பலை ஆறுநாட்டிகல் மைல் தூரம் இந்திய கடலுக்குள் இழுத்து வந்த



பெர்லின் (ஜெர்மனி) நினைவு சர்ச்சின் அருகேயிருந்த இந்த பிரம்மாண்டமான 'கிறிஸ்துமஸ் தாத்தா' சிலை, இரண்டாவது உலகப் போரில் குண்டு மழையில் இடிந்து போனதாம்.

–க.ரவீந்திரன்



பிறகு இந்தியக்கப்பலின் கேப்டன் தனது உயரதிகாரியிடம் முழு தாக்குதலுக்கு அனுமதி பெற்றார்.

"சர்வதேசகடல் எல்லைக்கு மீளாவிட்டால் சுடப்படுவீர்கள்!" என்ற எச்சரிக்கையை பலமுறை வற்புறுத்தியும் பாகிஸ்தான் கப்பல் உன்மத்தமாய் அத்துமீறல் தொடர்ந்தது.

இந்திய கப்பலின் அதிநவீன ரேடார் பொருத்தப்பட்ட ராக்கட் லாஞ்சர் இயங்கியது. ராக்கட் பாகிஸ்தான் கப்பலின் நடுபாகத்தைத்துளைத்தது. பாகிஸ்தான் கப்பல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

கடலில் குதித்து தப்பிக்கும் பாக் கப்பல் வீரர்கள் சுடப்பட்டனர்.

நடக்கும் கடற்சண்டையை அமெரிக்காவின் உளவுசெயற்கைகோள் மௌனமாய் ரசித்தது.

–அருணைக்கட்டிக்கொண்டு பிரசன்னாவும் சந்தியாவும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். அருணை மீட்க உதவும் அனைவருக்கும் வாய் வலிக்க வலிக்க நன்றி கூறினர்.

–தீவிர சிகிச்சைக்குப்பின் பிழைத்துக்கொண்ட ஸிஜா டியாராவை பார்த்து கண்சிமிட்டினாள். தேஜஸ்வினியும் டியாராவும் ஸிஜாவைக் காப்பாற்றிய கடவுளுக்கு மானசீகமாய் நன்றி கூறினர். இத்தனைக்கும் இடையிலும் சந்தியா–கோபதி டெலிபோன் பேச்சு தொண்டையில் சிக்கி ஊவாமீன் முள்ளாய் உலக உறுத்தல் கொடுத்தது டியாராவுக்கு!

## 13

குளிர்பதனமூட்டப்பட்ட அறை.

அறைக்குள் டைரக்டர் மாடல் ரிவால்விங் சேரில் கம்பீரமாய் வீற்றிருந்தான் டியாரா.

கதவை மும்முறை நளினமாக தட்டிவிட்டு இரு நொடி கழித்து உட்பட்டாள் சந்தியா. முகத்தில் மகன் அருண் மீட்கப்பட்ட சந்தோஷம் வழிந்தது.

"உக்காருங்கள் சந்தியா. உங்களை எதுக்காக தனியா பேச அழைச்சிருக்கேன்னு உங்களுக்கு குழப்பமாய் இருக்கும்!"

குழப்பமுகத்துடன் ஆமோதித்தாள் சந்தியா.

சந்தியா–கோபதி டெலிபோன் பேச்சுபதிவை போட்டுக்காட்டினான் டியாரா. "அன்னைக்கு அருணை மீட்க நான் கிளம்பிக்கிட்டுருக்கப்ப தேவா என்னை தனியா அழைச்சிட்டு போய் சொன்ன ரகசியம் இதுதான். உங்களை உங்களது கணவரிடம் காட்டிக்குடுக்க விரும்பாம அத்துடன் உங்கள் டெலிபோன் பேச்சை பற்றி விசாரிக்க போதுமான நிமிடங்கள் அவகாசம் இல்லாம அருணை மீட்கும் பணிக்குப் போய்ட்டேன். நான் எப்போதுமே பெண்களுக்கு ஆதரவாக பேசுபவன். அவர்களது நடவடிக்கைகளை நியாயப்படுத்துபவன். எதற்காக உங்களது மகனை நீங்களே ஆள் வச்சு கடத்னீங்க? தயவுசெஞ்சு அதற்கான பின்னணியைக் கூறுங்க!" அழ ஆரம்பித்தாள் சந்தியா. அவள் அழுது ஓயக் காத்திருந்தான் டியாரா.

சந்தியா கூறிய பிளாஷ்பேக் நம்பர் 1 சம்பவநாள் 10.08.1992.

[illegible] பெற்றோருடன் அமர்ந்திருந்தான் பிரசன்னா. பிரசன்னாவுக்கு எதிரே சந்தியாவின் தந்தை ராஜாராமனும் தாய் நாகம்மாளும் அமர்ந்திருந்தனர்.

நால்வருக்கும் காபியுடன் டிபன் அளித்துவிட்டு மூன்றாவது சோபாவில் அமர்ந்தாள் சந்தியா.

''பெண்ணை பிடிச்சிருக்கா உங்க பய்யன் பிரசன்னாவுக்கு?''

''ரொம்ப பிடிச்சிருக்கு. என்னை உங்க மகளுக்கு பிடிச்சிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்ருங்க!''

அப்பா திரும்ப முந்திக்கொண்டாள் சந்தியா. ''பிடிச்சிருக்கு!''

ராஜாராமன் சங்கோஜத்துடன், ''வரதட்சணை எதுவும் எதிர்பார்க்கிறீங்களா? கூச்சப்படாம எது எது வேணுமோ கேளுங்க - மகிழ்ச்சியா செய்யுறேன்!''

''வரதட்சணை வாங்குவது எங்களுக்கு உடன்பாடல்ல!'' பிரசன்னாவின் தந்தை கூறுவதை இடைமறித்தான் பிரசன்னா.

''எனக்கு வரதட்சணை வேணும்!''

''என்ன வேணும்னு கேளுங்க-மாப்பிள்ளை!''

''மின்னலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் யூனிட்டுகளை உலகம் முழுவதும் நிறுவி பரிட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டு வரும் LIGHTRON அமெரிக்க நிறுவனத்தின் பங்குகளை நீங்க வாங்கியிருக்கீங்க இல்லையா அங்கிள்?''

''ஆமா!''

''எத்ன பங்குகள் வாங்கியிருக்கீங்க?''

''ஒரு பங்கு அம்பது ரூபாவீதம் அய்யாயிரம் பங்குகள் இரண்டு லட்சத்து அம்பதாயிரம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறேன்!''

''எனக்கு அந்த பங்குகளை வரதட்சணையாக தந்துவிடுங்கள் போதும். வேறொன்றும் வேண்டாம்''

பலமாக சிரித்தார் ராஜாராமன்.

''மின்னலில் இருந்து அவர்கள் மின்சாரம் தயாரித்து வியாபாரரீதியாய் வெற்றிகண்டால் தான் பங்குகள் மதிப்பு உயரும். வாங்கிய ஆறுமாதத்தில் பங்குகள் மதிப்பு எட்டு ரூபாய் குறைந்திருக்கிறது. பத்து வருடத்தில் ஐம்பதுரூபாய் பங்கின் மதிப்பு அஞ்சு ரூபாய்க்கு கீழே இறங்கிவிடும் என்கிறார்கள். அதைப்போய் ஏன் கேட்கிறீர்கள்?''

''வரதட்சணை என்கிற பெயருக்கு நான் எதாவது வாங்கிக்கொள்ள விரும்பி கேக்கிறேன். கொடுங்களேன்!''

''சரி, மாப்பிள்ளை. நாளையே அய்யாயிரம் பங்குகளையும் உங்களுக்கு மாற்றித்தந்து விடுகிறேன். பின்னாடி நஷ்டமானா சொல்லிக் காட்டக்கூடாது!''

''அதேபோல லாபமானா நீங்களும் புலம்பக்கூடாது!''

''ஓகே. அக்ரிமெண்ட் அக்செப்டட்!'' அனைவரும் சிரித்தனர். வரும் காலக்கணவனின் முகத்தில் நரித்தனம் ஒளிந்திருப்பதை அவதானித்தாள் சந்தியா.

பிளாஷ்பேக் 2 சம்பவநாள் 06.06.1995

ஒலி வாங்கியை வைத்தாள் சந்தியா. தாயின் கால்களை பிடித்தபடி நின்றிருந்தான் இரண்டு வயது அருண்.



''ஃபோன்ல உங்கப்பாவா?''

''எப்டித்தெரியும்?''

''அரைலிட்டர் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி உன் முகம் இருக்றதை பாத்ததுமே கன்பர்ம் பண்ணிட்டேன். என்ன சொல்றாரு பெரியவரு?''

''நீங்க அவர் செய்ற எல்லா பிசினஸிலும் குறுக்கிடுறீங்களாம். அவர் எந்த டெண்டர் கோட் பண்ணினாலும் அதை சட்டபுறம்பா தெரிஞ்சுக்கிட்டு அவர் கோட் பண்ணதை விட சிறிதே குறைத்து கோட் பண்ணி ஜெயித்துவிடுகிறீர்களாம். தவிர அவர் தயாரிக்ற ப்ராடக்ட்களை மார்க்கெட்டிலிருந்து அறவே ஒழிக்க நியாயமில்லாம செயல்படுறீங்களாம். இன்னும் ஏதேதோ சொல்றார்!''

''அவர் சொல்றது பாதி உண்மை. பிசினஸ்னு வந்திட்டா மாமனார், மருமகன் உறவுமுறை ஏது? நான் அவர் பிசினஸை மட்டுமா நசுக்குறேன்... எனக்கு போட்டியா உள்ள எல்லா நிறுவனங்களின் பிசினஸ்களையும்தான் நசுக்குகிறேன். போர்க்களத்ல எதுக்கு ஒப்பாரி. நான் ஈடுபடாத பிசினஸ்களில் அவரை ஈடுபடச்சொல். அல்லது பிசினஸிலிருந்து விஆர்எஸ் வாங்கி ஒதுங்கிக்கச்சொல்லு!''

''மனிதாபிமானத்தோட பேசுங்க!''

''இந்தியாவின் முதல்பத்து பணக்காரர்களில் ஒருவனாக நான் உயரனும். அதுக்காக எந்த சாமதானபேததண்ட முறைகளிலும் ஈடுபடுவேன். உங்கப்பாவை முதுகுக்குப்பின்னாடி பேசாம இருக்கச்சொல்லு!''

படுக்கையறைக்குள் புகுந்து கதவை உட்புறமாய் அறைந்து தாளிட்டான் பிரசன்னா.

பிளாஷ்பேக் 3 சம்பவநாள் 24.08.1995.

**தொ**லைக்காட்சிப்பெட்டியில் CNN செய்திவாசிப்பாளர் கீழ்க்காணும் செய்தியை வாசித்தார். ''மின்னலில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் 'லைட்ரான்' நிறுவனம் வியாபாரீதியாய் வெற்றி பெற்றிருப்பதை தொடர்ந்து அதன் பங்குகளின் மதிப்பு இரண்டாயிரம் மடங்கு கூடியுள்ளது. தொடர்ந்து பங்குகளின் மதிப்பு தாறுமாறாய் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது!''

கழுத்து டையை தளர்த்தியபடி உட்பட்டான் பிரசன்னா. கால்குலேட்டர் பட்டன்களைத் தட்டி கணக்கிட்டாள் சந்தியா.

''உங்கப்பா எனக்கு குடுத்த 'லைட்ரான்' பங்குகளின் தற்போதைய மதிப்பு என்னன்னு கணக்குப்போடுறியா?''

''ஆம்!''

''நான் சொல்றேன்-அம்பது கோடி!''

''இது நமக்கு அடிச்ச ஜாக்பாட் பரிசுதானே?''

''யார் சொன்னது? எல்லாம் திட்டமிட்டு செஞ்சேன். எனக்குத்தெரியும் 'லைட்ரான்' ரெண்டு வருஷத்ல மெஹாவெற்றி பெறும்னு. பணத்தை வரதட்சணையா கேட்டிருந்தா உங்கப்பா ஒரு கோடிக்கு மேல்வா குடுத்திருப்பார்? ஒரு கோடி தந்தாலும் ஒரு கோடி ஒரு கோடி வரதட்சணையா குடுத்தேன்னு சொல்லிட்டு இருந்திருப்பார். நான் அவர்கிட்ட வாங்கினது பிசாத்து ரெண்டரை லெட்சம். ஒரே தோட்டால ரெண்டு டார்ஜட். ஒண்ணு-வரதட்சணை அதிகம் கேக்காத மருமகன்னு

பேரு. இன்னொன்று -மறைமுகமா அம்பது கோடி வரதட்சணை வாங்கிய சாதுர்யன்னு எனக்குள் ஒரு ரகசிய சந்தோஷம் வேற!''

''பங்குகளை என்னச் செய்யப்போறீங்க?''

''உடனடியா வித்து ஒரு சிங்கப்பூர் ஆசாமியோட கூட்டுசேந்து கொரியாவிலிருந்து டிவி பாகங்கள் வாங்கி இந்தியாவில அசெம்பிள் பண்ணி விக்கப்போறேன். டிவியின் பெயர் ''PRASHA...''

''எங்கப்பாவுக்கு அதில் ஒரு பத்து சதவீதம் தரலாமே...''

''ஏன் உங்கப்பா உன்னை கேட்கச் சொன்னாரா?''

''நோநோ. நான்தான்!''

''த பார். நாம ஒரு குறிப்பிட்ட தொழில்ல ஒரு ரூபா முதலீடு பண்ணி ஆயிரம் ரூபா லாபம் சம்பாதிக்கிறோம்னு வச்சுக்க. நூறு ரூபாய் ஒரு ரூபா குடுத்தவருக்கு குடும்போமா? அவர் குடுத்த ஷேர்ஸ் மதிப்பு வீழ்ச்சியடைஞ்சிருந்தா நஷ்டத்தை உங்கப்பாகிட்ட கேக்றது எவ்வளவு தப்போ அவ்வளவு தப்பு லாபத்தை உங்கப்பா கூட பகிர்ந்துக்கிறது!''

மௌனித்தாள்.

''எனக்கு தூக்கம் வருகிறது சந்தியா. படுக்கைக்கு செல்கிறேன்!''

பிளாஷ்பேக் 4 சம்பவநாள் 15.02.2000.

அழுதுகொண்டிருந்தாள் சந்தியா.

லேசான போதையுடன் நடந்துவந்தான் பிரசன்னா. ''ஏன் அழுற?''

''எதுவும் கேக்காதிங்க!''

''ஏன்?''

''சொன்னா எதுவும் பிரயோஜனம் இருக்கணும். இல்லாம எதுக்கு வீணா சொல்லிக்கிட்டு!''

''அப்டின்னா நான் வரும்போது நீ அழக்கூடாது. அப்டி மீறி அழுதா காரணம் சொல்லியே ஆகணும்!''

''எங்கப்பாவுக்கு பிசினஸ்ல பலத்த நஷ்டம். கடன்காரர்கள் நெருக்குகிறார்கள். அவசரமாய்



ஜப்பானில் விபத்திலோ, அல்லது தாக்குதல்களிலோ, உறுப்புகளை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகளை சிலிகான் கொண்டு துல்லியமாக உருவாக்குகிறார்கள்.
-க.ரவீந்திரன்



அவருக்கு 12 கோடி தேவைப்படுகிறது. குடுத்து உதவுங்களேன்!''

''உங்கப்பா போன் பண்ணினாரா?''

''என் தம்பி போன் பண்ணினான்!''

''ஒரு ரூபா ரெண்டு ரூபா கடனே திரும்பி வரதில்லை. பனிரெண்டு கோடி கடன். நான் கடன் தரணும்னா ஒரு கண்டிஷன். உங்கப்பாவ நேரடியா என்கிட்ட பேசசொல்லு. அவர் வாயால கடன கேட்டா நான் தரத்தயார்!''

''அம்மாவ பேசச்சொல்றேன்!''

'நோநோ. உங்கப்பாதான் பேசணும். பனிரெண்டு கோடி இல்ல அவரின் ஒட்டுமொத்தக்கடனை அடைச்சிடுறேன். அவரின் ஒட்டுமொத்த நிறுவனங்களை எனக்கு வித்துட்டு வீட்ல அமைதியா ஓய்வெடுக்கச் சொல்லு. உன் இரு தம்பிகளை ஒரு தங்கையை வேலை தேடப் போகச் சொல்லு. உங்க வீட்டுச் செலவுக்கு மாதம் ஒரு லட்சம் குடுத்து விடுகிறேன்!''

''அப்பா சம்மதிக்கமாட்டார்!''

''அப்டின்னா இது பற்றி இனிம பேசாதே!'' கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து நெட்டில் இறங்கி மேய ஆரம்பித்தான்.

பிளாஷ்பேக் 5 சம்பவநாள் 12.6.2003.

மும்பை.

பால்ய தோழியிடம் பழைய பிளாஷ்பேக் சம்பவங்களை சொல்லி அழுதாள் சந்தியா.

''உங்கப்பா இப்பவாவது பிசினஸில் நஷ்டத்லயிருந்து மீண்டுவிட்டாரா?''

''இல்ல ஆயிஷா... போன வருஷம் ஹார்ட்அட்டாக் வேற... பைபாஸ் சர்ஜரி பண்ணிருக்கு அவருக்கு!''

''உன் தந்தையின் கடன் அடைக்கவும் உன் பெற்றோரும் உனது சகோதரசகோதரிகளும் மேன்மையடையவும் ஒரு வழி இருக்கு. சொன்னா நீ கோவித்துக்கொள்ளக்கூடாது!''

''சொல்லு!''

''நான் உனக்கு ஒரு கிரிமினலை அறிமுகப்படுத்துகிறேன். அவன் பெயர் கோபதி. எங்கள் குடும்பத்துக்கு ஒரு பிரச்சினை இருந்தது. கோர்ட்டுக்கோ போலீஸுக்கோ போகாம குறைஞ்ச செலவுல முடிச்சுக் குடுத்தான் அவன். ரொம்ப ரொம்ப நேர்மையான அயோக்கியன் அவன். அவனுக்கு அஞ்சுலட்சமோ ஆறுலட்சமோ சம்பளம் பேசி அருணை கடத்த சொல்லி உன் கணவனிடம் உங்கப்பா இழந்த அம்பது கோடிரூபாயை பணயத்தொகையா கேள். மகன் மேல உன் கணவனுக்கு கொள்ளைப் பிரியம்னு சொல்லியிருக்க. உன் கணவன் பணம் குடுத்திடுவார். கிடைக்ற பணத்தை வச்சு உங்கப்பாவுக்குத் தெரியாம உங்கப்பா கடனை அடை. உன் தம்பி தங்கைகளின் எதிர்காலங்களை பிரகாசப்படுத்து!''

''அய்யோ கடத்தலா, அதுவும் என் அன்பு மகனையா?''

''ஒரு பிரச்சினையும் வராது. அதுக்கு நான் கேரன்டி.''

பேசிப்பேசி சந்தியாவை சம்மதிக்கவைத்து உலாதொலைபேசியில் பேசி கோபதியை வரவழைத்தாள் ஆயிஷா.

கோபதி வணங்கியபடி உட்பட்டான். மூவரும் சேர்ந்து கடத்தல்திட்டம்

வருக்க ஆரம்பித்தனர்.

சொல்லி முடித்தாள் சந்தியா.

பிளாஷ்பேக்குகளை சந்தியா சொல்லும்போது அவளது கண்களையும் மூக்கையும் உதடுகளையும் கையசைவுகளையும் அவதானித்தாள் டியாரா.

இவள் சொல்வது அக்மார்க் உண்மை. "உங்களது பிறந்த வீட்டின் மீது உங்களுக்கிருக்கும் அன்பும் ஈடுபாடும் என்னை பிரமிக்க வைக்கிறது. தந்தையாரின் கடனையடைக்க நீங்கள் தேர்ந்தெடுத்த வழி மகாதவறு. வைரத்துடன் கோபதி தப்பியிருந்தால் அடுத்த ஆறுமாதத்தில் இந்தியா பல வீரியமான தீவிரவாத தாக்குதல்களை சந்திந்திருக்கும் உங்கள் கணவனை ஒரு மாபெரும் வில்லனாக பார்ப்பது விவேகமான பார்வையல்ல. பிசினஸில் வெற்றி மிகப்பெரிய போதை. அந்த போதை எல்லா வளரும் பணக்காரர்களிடமும் இருக்கிறது. உங்கள் கணவரிடமும், மாமனார்-மருமகன் ஈகோ இல்லாத இடம் ஏது? பிரச்சினை தீர உங்களது தந்தையோ உங்களது கணவரோ ஒருபடி இறங்கிவரவேண்டும். அந்த மனோபாவம் அவர்களுக்கு வர கடவுளை பிரார்த்திப்போம். நீங்கள் கோபதியுடன் பேசிய டெலிபோன் பதிவை நானும் தேவாவும் அழித்து விடுகிறோம். நடந்ததை கெட்டகனவாய் நினைத்து மறந்துவிடுவம். உங்கள் பிறந்த - புகுந்த வீடுகளின் எதிர்காலம் இன்னும் பிரகாசமாக அமைய வாழ்த்துகிறேன்!"

"நன்றி ப்ரதர்!"

"நீங்க கிளம்புங்க சந்தியா. குட்பை!"

காருக்குத்திரும்பினாள் சந்தியா. காரில் காத்திருந்தான் அருண்.

"ஏன்ம்மா இவ்வளவு லேட்டு?"

"சில போலீஸ் பார்மாலிட்டீஸ் எல்லாம் முடிக்க டைம் டிலே ஆய்டுச்சுடா கண்ணா!"

காரை செலுத்த ஆரம்பித்தாள் சந்தியா. காரை செலுத்தும் தாயையே தொடர்ந்து உன்னித்துக்கொண்டே வந்தான் அருண்.

"என்னடா அப்டி பாக்ற?"

"ஏம்மா அப்படி செஞ்ச?"

## 14

குளிர்பதனமூட்டப்பட்ட அலுவலக அறை. மருத்துவர் சிபாரிசு செய்த பல்வாணமாத்திரைகளை ஒன்றன்பின் ஒன்றாக வாய்க்குள் இட்டு குளிர்நீர் விழுங்கினார் ராஜாராமன்.

தொலைபேசி சிணுங்கியது. ஒலிவாங்கியை எடுத்தார்.

"தாங்க்யூ மிஸ்டர் ராஜாராமன். என்னிடம் நீங்கள் வாங்கிய பெரிய தொகையும் அதற்கான வட்டியும் ரிபே பண்ணப்படாம நீண்ட நாள் கிடப்பில் இருந்தது. நேற்றைக்கு ஒரு பைசா பாக்கி இல்லாம செட்டில் பண்ணியதற்கு நன்றி!"

எதிர்முனை மரித்தது. தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள்!

அனைத்து கடனையும் வட்டியையும் பைசல் பண்ணிதற்கான நன்றி அறிவிப்புகள்!

'யார் என் கடன்களை வட்டியுடன் அடைப்பது?'

அழைப்புமணி சிணுங்கியது. பிரசன்னா உட்பட்டான். "நமஸ்காரம் மாமா!"

"வாங்க மாப்பிள்ளை!"

"என்னை மன்னிச்சிருங்க மாமா!" சாஷ்டாங்கமாக மாமனாரின் கால்களில் விழுந்தான்.

"அய்யய்யோ... என்ன மாப்பிள்ளை இது? எந்திரிங்க எந்திரிங்க!"

"மொதல்ல என்னை மன்னிச்சேன்னு சொல்லுங்க- எந்திரிக்கிறேன்!"

"நீ எந்திரிக்கிறதுக்காக சொல்றேன்-மன்னிச்சிட்டேன். எந்திரிங்க மாப்பிள்ளை!"

எழுந்தான். "எல்லா மாப்பிள்ளைகளும் செய்யும் தப்பை நானும் செஞ்சிட்டேன் மாமா. பெரும்பாலும் ஆண்கள் மனைவி மேல காதலா இருக்காங்க. ஆனா அந்த அழகான அறிவான மனைவியை பெற்றுத்தந்த மாமனார் மாமியாரை மாப்பிள்ளைகள் மதிக்றதில்லை. நானும் இறந்த காலத்தில் அப்படிதான் இருந்துவிட்டேன். 'அருண் கிட்நாப்பிங்'-கடவுள் என் ஈகோவுக்கு கொடுத்த தண்டனை. பிசினஸில் வெற்றி தேவைதான் - மனிதாபிமானத்தைக் கொன்றுவிட்டல்ல. என் நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாக இயக்குநர் பொறுப்பை இனி நீங்களே கவனியுங்க மாமா. இதோ அதற்கான சட்டப்பூர்வ அனுமதி!"

சிரித்தார் ராஜாராமன். "பாழாய் போன ஈகோ என்னையும்தான் பாடாய் படுத்திருச்சு. நீங்க இவ்ளவு தூரம் இறங்கி வந்து பேசினது எனக்கு பரமானந்தம். கனமாக இருந்த என் மனசு லேசாய்டுச்சு. நீங்க என் கடன்களை அடைச்ச வரைக்கும் சரி. முன்னெப்போதையும் விட கடுமையா உழைச்சு வரும் காலத்ல பிசினஸில் ஜெயிச்சு காட்டுறேன். என்னை தடுக்காதிங்க மாப்பிள்ளை!"

தலையாட்டிக்கொண்டான் பிரசன்னா.

"கடல்நீரிலிருந்து குடிநீரையும் தங்கத்தையும் மிக எளிய செலவில் பிரித்தெடுக்கும் பிளாண்ட்களை உலக கடல்பகுதிகள் முழுக்க பரிட்சார்த்த முயற்சியாய் நிறுவியுள்ளது அதே 'லைட்ரான்.' வழக்கம்போல் பங்குகளை விடுவித்துள்ளது. நானும் அய்யாயிரம் பங்குகள் கடனோடு கடனாக போனவாரமே அதே இரண்டரை லட்சத்துக்கு வாங்கியிருக்கேன். மீண்டும் லைட்ரான் வியாபாரரீதியாய் ஜெயிக்கத்தான் போகுது. அதோடு சேர்ந்து நானும் ஜெயிப்பேன் மாப்பிள்ளை!"

"வாழ்த்துக்கள் மாமா!"

மாப்பிள்ளையை கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தார் ராஜாராமன். இருவரும் அறையை விட்டு வெளியே நடந்துவர சந்தியா, சந்தியாவின் அம்மா, அருண், பிரசன்னாவின் பெற்றோர் வாய்கொள்ளாத சிரிப்புடன் வரவேற்றனர்.

அன்றிரவு நிலாவெளிச்சம் இருபெரிய குடும்பங்களின் ஆனந்தக்களியாட்டத்தை கனிவுடன் கண்டுகளித்தது!

(முற்றும்)